சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4 | இதழ்: 11 | ஏப்ரல்- 2023 | விலை - ரூ.15/-

VOL:4 | ISSUE: 11 | APRIL - 2023 | Rs. 15/-



அக்கல்கோட் மகராஜ் சுவாமி சமர்த்தர்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 50₹/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-11 ஏப்ரல் - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



எல்லாம் முடிந்து விட்டது என்று நீயே உன்னை முடக்கி கொள்ளாதே. மனதை ஒரு நிலைப்படுத்திப் பார். உன்னை சுற்றியுள்ள வாய்ப்புகள் புலப்படும். எல்லா சந்தர்பங்களும் தானாக அமையாது. நீ தான் அதை உருவாக்க வேண்டும்.

வெற்றி தோல்விகளை சகஜமாக எடுத்துக் கொள். நான் இதுவரை தோல்விகளையும், இழப்புகளையும் மட்டும் தானே சந்தித்து வருகிறேன் என்று புலம்புவது கேட்கிறது. இது வரை நீ தோல்விகளை மட்டும்தான் சந்தித்தாயா,வெற்றிகளை சந்திக்கவே இல்லையா! யோசித்துப் பார். விடை உனக்கே புலப்படும்.

தோல்விகளை கண்டு துவண்டு போகாதே.உன்னுடைய இலட்சியத்தை அடைய எத்தகைய தடைகள் வந்தாலும் அதை தைரியமாக எதிர்த்து நில்.

மனம் தளராதே உனது ஆசைகள், எண்ணங்கள், அனைத்தும் கூடிய விரைவில் நிறைவேறும். நீ வருத்த படுவதால் எதுவும் மாறாது. உன் மீது நம்பிக்கை வைத்து உன் குறிக்கோளை நோக்கி பயணப்படு.

அதை அடைய உனக்கு நான் துணை இருப்பேன். இது என் சத்திய வாக்கு. என் வார்த்தைகள் மீது நம்பிக்கை வைத்து செயல்படு. வாழ்வில் நீ விரும்பிய நிலையை அடைவாய், கவலைபடாதே! நான் இருக்கிறேன். நல்லதே நடக்கும்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து ஏழாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை - 23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

வழக்கம்போல் காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் ஆரம்பித்த விழா, தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு சிறப்பு விருந்தினர்கள் வருகை தரவும் புத்தக வெளியீட்டு விழா தொடங்கியது.

இம்மாத இதழை சம்பூர்ண ஸ்ரீ வல்லப சரிதாம்ருத ஆசிரியர், திருமதி மாதங்கி பாலாஜி அவர்கள் வெளியிட, சாயி பாடகர், சிம்மக்குரலோன் திரு. சந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள். விழாவில் நியூ ஈரா கார்மென்ட்ஸ் திரு. அகஸ்டின், திரு. ராஜசேகர், திரு. உமா சங்கர், திருமதி. ஜெயலட்சுமி தேவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புத்தக வெளியீட்டிற்கு வந்திருந்த அனைவருக்கும் சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தின் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது. இதழ் வெளியீட்டினை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும் நமது இதழுக்கு, சென்னை முரளி சாய்ராம் அவர்கள் ஒரு மூன்று வருட சந்தாவும், கும்பகோணம் இரவி அவர்கள் நான்கு மூன்று வருட சந்தாவும், தேனி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஐந்து ஒரு வருட சந்தாவினையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளனர். அவர்களும்,



அவரது குடும்பத்தார் அனைவரும் நீள் ஆயுள், நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த் திக்கின்றோம்.

சென்ற மாதம் பாபா ஆலய நிகழ்ச்சி ஒன்றில் பிரார்த்தனை செய்வதற்காக அந்தியூர் ஸ்ரீ ஆனந்த சாயிபாபா ஆலயத்திற்குச் சென் றிருந்தோம். அன்று பிரார்த்தனைக் காக வந்திருந்த ஏறக்குறைய நூற்றி ஐம்பது நபர்களில் நூறு நபர்கள் மது அடிமைகளுக்காக பிரார்த்தனை செய்யக்கூறினார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் மதுப்பழக்கத்தின் கொடுமை தலைவிரித்தாடுகிறது. மதுவிற்கு அடிமையானவர்களால் அவர்களது குடும்பத்தினர் எவ்வளவு துன்பத்திற்கு ஆளாகின்றார்கள் என்பதனை நாம் அனைவரும் நன்கறிவோம்.

தற்போது பள்ளி மாணவர்கள் இடை யேயும் போதைப் பழக்க வழக்கங்கள் அதிகரித்து வருவதை பார்க்கும்போது இவர்களின் எதிர்





காலத்தைப் பற்றி பயம் ஏற்படுகிறது. எனவே சாய் பக்தர்களான நாம் அகிம்சா முறையில் பகவான் சாயிபாபாவிடம், ஆளும் ஆட்சியாளர் களின் மனதில் மாற்றம் ஏற்பட்டு நாட்டில் மது விலக்கு கொண்டு வரவேண்டும் என்று பிரார்த்திப்போம். நம்மால் இயன்றது அவ்வளவே!

உங்களது வீட்டு குழந்தைகளை ஆரம்பத்தில் இருந்து நல்ல பழக்க வழக்கங்களையும், ஆன்மீகம்,யோகா, தியானம், பஜனை போற்றவற்றை கற்றுக் கொடுத்து வளருங்கள். மருத்துவராகவோ, பொறியாளராகவோ வாழ்வதைவிட நல்ல மனிதனாக வாழ வேண்டும் என்று சொல்லிக் கொடுங்கள்.

பன்னிரெண்டு வயதில் ஒரு குழந்தைக்கு நல்ல குருநாதர் ஒருவரின் மூலமாக குண்டலினி தீட்சை கொடுத்து பயிற்சி செய்து வரச் செய்யுங்கள். உங்கள் குழந்தை அவனே தவறாக செல்ல நினைத் தாலும் செல்ல முடியாது. எல்லாம் தாய் தந்தையரின் வளர்ப்பில்தான் உள்ளது. எனவே விழிப்புணர்வு முதலில் தாய் தந்தையருக்கு கிடைக்கட்டும்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கியத்துடனும்,நிம்மதியுடனும் வாழ வேண்டும் என பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!



ஓம் ஸ்ரீசாயி பாபா மந்திரம்

நமது கோவைத் தமிழர் ஸ்ரீ சிவநேசன் சுவாமிகள் பிரபலப்படுத்திய " ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி" என்ற மகா மந்திரத்தை திரை இசைப்பாடகி திருமதி. வாணி ஜெயராம் அவர்கள்

"ஓம் சாயி நமோ நமஹ
ஸ்ரீ சாயி நமோ நமஹ
ஜெய ஜெய சாயி நமோ நமஹ
சத்குரு சாயி நமோ நமஹ" என்று தேன்குரலில் பாடியிருப்பார்கள்.



மேற்படி மந்திரத்தை தினமும் ஜெபித்து வந்தால் சாய் பாபாவின் அருளும், ஆசியும் முழுமையாக நமக்கு கிடைக்கும் என்பதை பரிபூரணமான உண்மை.

சீரடி ஸ்ரீசாய் பாபா அவர்க ளின் மீது மேலான பற்று கொண்ட பக்தர்களுக்கும் மற்றும் அவரை அறிந்து கொள்ள நினைக்கும் அனைவருக்கும் இப்பதிவினை சீரடி ஸ்ரீசாய் பாபா அவர்கள் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றோம்.

ஸ்ரீ சாய்பாபாவை இறுகப் பற்றிக் கொண்டால் வாழ்கை என்னும் கடலை எளிதாக கடக்கலாம். எவ்வளவுக் கெவ்வளவு பாபாவின் மீது ஈடுபாடு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மாயத்தோற்ற மான இவ்வுலக நடவடிக்கைகளில் உங்களுக்கு ஈடுபாடு குறையும்.

பாபா எப்போதுமே வாழ்கின்றார். ஏனெனில் பிறப்பு இறப்பு என்ற இருமை யையும் கடந்தவர் அவர். எவனொருவன் ஒருமுறை முழுமனத்துடன் அவரை நேசிக்கிறானோ, அவன் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், அவரிடமிருந்து கேள்விக்குண்டான பதிலைப் பெறுகிறான்.

ஸ்ரீ சாய் சத்சரித்திரம் என்ற புத்தகம் உண்மையில் மனிதருக்கு ஒரு வரபிரசாதமாகும். பாபாவின் மகாசக்தி, சாய் சத்சரிதத்தின் ஒவ்வொரு எழுத்தின் உள்ளேயும் பொதிந்து கிடக்கின்றன. நமது அருகிலேயே அவர் எப்போதும் இருக்கிறார். எந்த ரூபத்தையும் எடுத்துக் கொள்கிறார். பிரியமுள்ள பக்தனிடம் தோன்றி அவனைத் திருப்திப்படுத்துகிறார்.

மாயை என்று அழைக்கப்படும் இவ் வுலக வாழ்க்கை நிகழ்வுகளுக்கு நடுவில் நாம் வாழும் வரை, நமக்கு ஏற்படும் இன்ப துன்பங்களை ஒருவராலும் தவிர்க்க முடியாது.

இவ்வுலக நடவடிக்கைகளை முற்றி லும்



துறந்து ஒரு யோகி, அல்லது சன்னியாசி யாக மாறினால்தான் மாயையை நாம் தவிர்க்கமுடியும்.

அதே சமயத்தில் ஒருவர், பாபாவின் நாமத்தை ஜெபிப்பது, பாபாவைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவது, பாபாவைப் பற்றி படிப்பது, பாபாவையே நினைப்பது போன்ற சில வழிகளில் எப்போதும் பாபாவையே இறுகப் பற்றிக்கொண்டால், மாயையின் தாக்குதல்களை எதிர்க்கும் மனோபலத்தை வளர்த்துக் கொள்வதற்கு பாபாவின் உதவி நமக்குக் கிடைப்பதை உணரலாம்.

சத்சரிதத்தை வாய்விட்டு உரக்கவோ, மனதிற்குள்ளாகவோ, மனமும் குரலும் சேர்ந்து உபன்யாசமாகவோ பக்தியுடன் பாராயணம் செய்யும் பொழுது ஸ்ரீ சாய் நாதரின் தெய்வீக சைதன்யம் பாராயணம் செய்யும் திசையை நோக்கி ஈர்க்கப்படும்.

ஒரு பக்தனின் அனைத்து உடல் சார்ந்த, உயிர் சார்ந்த, மானசீக நோய் சம்பந்தமான, தொந்தரவுகள், கஷ்டங்கள் அனைத்து அதிர்வுகளும் ஸ்ரீ சாய் சரித்திரத்தை பாராயணம் செய்யும் பொழுது அவை ஸ்ரீ சாய்நாதரின் தெய்வீக சைதன்யத்தை சென்றடைகின்றன.

அவை அங்கு சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் பாராயணம் செய்யும் பக்தரை ஸ்ரீ சாய்நாதரின் அருள் நிரம்பிய அலைகளாக திரும்ப வந்து சேருகின்றன. இது போன்ற சூழ்நிலைகளில் பக்தன் இவ்வுலக சுகங்களையும் பரலோக சுகங்களையும் பெறுகிறான்.

ஸ்ரீ சாய்பாபாவின் கிருபையைப் பெற நம்மிடம் உள்ள அஹங்காரம், ஆணவம் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். எல்லாவிதமான பெருமைகளும் ஒழிய வேண்டும். பின்னர் தான் அவரது சக்தியை, இரக்கக்குணத்தை உண்மையான சுபாவத்தை நாம் அறிய இயலும். அதற்கு மேற்கண்ட மந்திரம் உங்களுக்கு நிச்சயமாக உதவும்.

ஓம் சாய்ராம்.

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

பாபாவிடம் வரம் பெற்று வாழ்க்கையை வளப்படுத்தியவர்கள் ஏராளம் ஏராளம். அதுபோலவே பாபா வரம் கொடுத்தும் அதை பயன் படுத்திக் கொள்ளாதவர்களும் ஏராளம். அதற்கு காரணம் உணர்ச்சிவசப் படுதலும், அதிகபட்ச ஆசையுமே காரணம் என்றுதான் கூற வேண்டும்.

அதுபோன்ற ஒரு சிலரின் கதையைப் பாரப்போம். சத்ய கலா (பெயர் மாற்றப்பட்டிருக்கிறது) என்ற சகோதரி வெகுநாட்களாக குழந்தை இல்லாமல் மிகுந்த மன உளைச்சலில் இருந்தார். அவர் நம் மையத்திற்கு வந்து பாபாவிடம் பிரார்த்தனை வைத்தாள்.

நமது குரு அப்பெண்ணிடம் தொடர்ந்து ஒன்பது வியாழக்கிழமை தவறாமல் வந்து கொண்டிருங்கள். ஒன்பது வாரங்களும் ஒன்பது வகையான பிரசாதங்கள் பாபாவிடம் இருந்து உங்களுக்குக் கிடைக்கும். அதை நீங்களும் உங்கள் கணவரும் உண்டு வாருங்கள். நிச்சயமாக உங்களுக்கு குழந்தை வரம் கிடைக்கும். என்று கூறினார்.

அப்பெண்ணும் தொடர்ந்து எட்டு வாரங்கள் வந்து கொண்டிருந்தாள். ஏனோ ஒன்பதாவது வாரம் அப் பெண் வரவில்லை. அவளுக்கென எடுத்துவைத்த பிரசாதத்தை வாங்க அவள் கடைசி வரை வரவேயில்லை. ஆனால் அவளுக்குப் பதில் புதிதாக வந்த இன்னொரு பெண்மணி குருவிடம் குழந்தை இல்லாததைக் கூறி வரம் கேட்க, குருவும் அந்தப் பிரசாதத்தை அந்தப் பெண்மணிக்கு வழங்கிவிட்டார்.

பத்தாவது வாரம் வந்த அந்தப் பெண்ணிடம், ஏன் சென்ற வாரம் வரவில்லை என்று குரு கேட்டபோது, அவள் கூறினாள். பாபாவிடம் பிரார்த்தனை வைப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்பே குழந்தையின்மை சிகிச்சை மையத்தில் பதிவு செய்திருந்தோம், போன வாரம்தான் அதற்குண்டான அனுமதி கிடைத்தது. அதுவும் வியாழக்கிழமையாக இருக்கவே இதுவும் பாபாவின் செயலாக இருக்கும் என்று எடுத்துக்கொண்டு அங்கு சென்றுவிட்டோம். அதனால் தான் வரமுடியவில்லை அய்யா என்றாள்.

அதுவும் பாபாவின் செயல்தான். நானும் ஒத்துக் கொள்கிறேன். நவீன மருத்துவத்தால் உங்களுக்கு குழந்தைசெல்வம் கிடைக்க பாபா அருள் செய்திருந்தால், உங்களை ஏன் இங்கு எட்டு வாரங்கள் தொடர்ந்து வர வைத்திருக்க வேண்டும். எட்டு வாரங்கள் இருந்த பொறுமை கடைசி ஒரு வாரத்தில் இல்லாமல் போய் விட்டதே! கடைசி ஒரு வாரம் உங்களின் பொறுமையை சோதிப் பதற்காக இதுவும் பாபாவின் செயல் என்று ஏன் நீங்கள் யோசிக்கவில்லை.

கலியுகத்தின் கண்கண்ட கடவுளான சாயி நாதனைவிட இந்நாளைய நவீன மருத்துவம் உங்களுக்கு பெரிதாகப் போய்விட்டதல்லவா? பரவாயில்லை. ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கேட்டதால் இறைவன் எதையும் உங்களுக்குக் கொடுப்பதில்லை. அவன் ஏற்கனவே உங்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்துவிட்டான். அதை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் உங்களுக்குத்தான் நம்பிக்கையும், பொறுமையும் வேண்டும்.

அது இல்லாதவரை இறைவன் உங்களுக்கென கொடுத்ததை அடைய முடியாமல் வருத்ததுடன் தான் வாழ்வீர்கள். என்றார். அதற்குப்பின்பு மருத்துவ சிகிச்சை எடுத்துப் பல வருடங்களுக்கு பின்பும் அவர்களுக்கு இன்றும் குழந்தைச் செல்வம் கிட்டவில்லை என்பது வருத்தமான செய்தி.

மற்றொரு ஆனந்தமான செய்தி என்னவென்றால் ஒன்பதாவது வாரத்து பிரசாதத்தை மட்டும் பெற்றுக் கொண்ட புதிதாய் வந்த பெண் அடுத்த வருடமே அழகிய ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். என்னே



பரம்பொருள் சாயிநாதனின் லீலை.

மற்றொரு சகோதரி நகரத்தில் இருந்து சற்று தள்ளி இடம் வாங்கி வீடு கட்ட ஆரம்பித்திருக்கின்றார். பொருளாதார பிரச்சனைகளால் கட்டிட வேலைகள் பாதியில் நின்றுவிட்டன. எவ்வளவோ முயற்சித்தும் தொடர முடியவில்லை. கைகளில் இருந்த மொத்தப் பணமும் முடங்கி விட்டது.

நேரம் சரியில்லை என்று நினைத்து சாதகம் பார்க்கலாம் என்று சோதிடரிடம் செல்ல, அவரோ, பரிகாரம் செய்தால் சரியாகிவிடும் என்று கூற, பரிகாரம் செய்து,செய்து, மேற்கொண்டு கடனானதுதான் மிச்சம். ஒரு காரியமும் நடக்கவில்லை. ஒரு வழியாக கடைசியாக குருவிடம் வந்து சேர்ந்தார்கள்.

விபரத்தைக் கேட்ட குரு, அந்தப்



பெண்ணிடம், நீங்கள் ஐந்து வாரங்கள் மட்டும் ரூ.நூறு வீதம் கொடுத்து, தியானாலயா பிரார்த்தனை மையத்தில் நடக்கும் அன்னதானத்தில் கலந்து கொள்ளுங்கள். ஆறாவது வாரம் உங்களது பிரட்சனைக்கு தீர்வு கிடைக்கும் என்று கூற, அந்த சகோதரியும் குரு கூறியதைப்போன்று அன்னதானத்தில் கலந்து கொண்டார்.

ஆறாவது வாரம் பாபாவின் அனுகிரகத்தால், அவர்களுக்கு பல வருடங்களாக வராமல் இருந்த ஒரு பெரும் தொகை கைக்குவர, அதை வைத்து அவள் பாபாவிடம் பிரார்த்தித்ததுபோல் வீடு கட்ட முயற்சித்தாள். ஆனால் அவளது கணவனோ அந்தப்பணத்தை வியாபாரத்தில் முதலீடு செய்து பெரும் லாபம் சம்பாதிக்கலாம் என்று கூறினார்.

மேலும், அதில் வரும் லாபத்தில் ஒரே வருடத்தில் வீட்டை கட்டிக் கொள்ளலாம் என்று கூறவும், அந்த சகோதரிக்கும் ஆசை துளிர்விட, அந்தப் பணத்தை வியாபாரத்தில் முதலீடு செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் நன்றாகப் போய்கொண்டிருந்த வியாபாரம் ஆறே மாதங்களில் நஷ்டமடைந்து மொத்த பணத்தையும் இழந்து விட்டார்கள்.

கடந்த ஐந்து வருடங்களாக அந்த வீடும் கட்டப்படாமல் கிடக்கிறது. வியாபாரமும் நஷ்டமடைந்தததால், சொந்த வேலையை விட்டுவிட்டு கணவன் வேலைக்குப் போகின்றார். பாபாவிடம் நாம் எதற்கு வரம் கேட்கிறோமோ, அந்த வரத்தை பாபா அருளுவதில் தாமதம் செய்வதே இல்லை. ஆனால் நாம் தான் அந்த வரத்தை தவறாக பயன்படுத்துகிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படித்தான் ஓர் அன்புச்சகோதரி எங்களது வார வழிபாட்டில் நடக்கும் அன்னதான சேவையில் பக்தர்களுக்கு உணவு பரிமாறுவதில் அதிக ஆர்வம் காட்டுவாள். அடுத்த பெண்கள் உதவிக்கு வந்தாலும் வழுக்கட்டாயமாக அவர்களை உட்கார வைத்துவிட்டு தான் மட்டுமே பரிமாறுவாள்.

அன்னதான சேவையில் பங்கு பெற முடியாத மற்ற சகோதரிகள் குருவிடம் புகார் செய்ய, குருவும், அந்த சகோதரியே பரிமாறட்டும். நீங்கள் வேறு வேலை இருந்தால் பாருங்கள் என்று கூறி விட்டார்.

அந்த சகோதரி உணவு பரிமாறும் போது பக்தர்களுக்கு கொஞ்சம், கொஞ்சமாக உணவு பரிமாறுவாள். இரண்டாம் முறை கேட்டாள் இல்லை என்று கூறிவிடுவாள். எப்படியோ இறுதியில் உணவு மிகுதியாக தங்கிவிடும். உடனே குருவிடம் வந்து குருவே உணவு மீந்து விட்டது. நான் வீட்டிற்கு எடுத்துப் போகவா என்று கேட்பாள். குருவும் சரி எடுத்துப்

போங்கள். வீணாகப் போய்விடாமல் இருந்தால் சரி என்று கூறுவார்.

மையத்தில் சாப்பிடாதவர்களுக்கு மட்டும் சிறிது எடுத்து வைத்துவிட்டு மீதியை வீட்டிற்கு எடுத்துச் சென்று விடுவாள் அந்தச் சகோதரி. மையத்தில் எடுத்த வைத்த சாப்பாட்டை நேரம் இருந்தால் சாப்பிடுவோம். பூஜை முடிய நேரமாகிவிட்டால் மறுநாள் காலையில் சாப்பிடுவோம். அதுவரை அந்த உணவு கெட்டுப் போனது கிடையாது.

நான்கு மாதம் கழித்து அந்த சகோதரியின் கணவர் மையத்திற்கு வந்து குருவை சந்தித்தார். வந்தவர் சற்று கோபமாக, ஏன் சாய்ராம் வாரா வாரம் கெட்டுப்போன உணவை வீட்டிற்கு கொடுத்து விடுகின்றீர்கள். கெட்டுப் போன உணவை சாப்பிடுவதற்கு நாங்கள்தானா கிடைத்தோம். இனிமேல் எங்கள் வீட்டிற்கு உணவு கொடுத்துவிடாதீர்கள் என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அடுத்த வாரம் வந்த சகோதரியிடம் குருநாதர் எதுவும் நடக்காததுபோல், போனவாரம் உணவு நிறைய மீந்துவிட்டது போலிருக்கின்றதே! வீட்டிற்கு எடுத்துப் போனீர்களே கெட்டுப் போகாமல் இருந்ததா என்றார். உடனே அந்த சகோதரி, ஆமாம் குருவே! உணவு கெட்டுப் போய்விட்டது என்றவர் போன வாரம் மட்டுமல்ல குருவே, இது வரை எடுத்துப்போன எல்லா வாரங்களும் உணவு உடனே கெட்டுப் போய்விடுகிறது. நீங்கள் என்ன எண்ணை உபயோகப்படுத்துகிறீர்கள் என்று தன் மீது தவறில்லாதது போல் குருவிடம் கேட்டாள்.

அதற்கு குரு அவர்கள், எனக்கு காணிக்கையாக கிடைக்கும் எண் ணையை உபயோகப் படுத்துகிறேன். அதிருக்கட்டும் உங்களுக்கு உணவு கெட்டுப்போகிறது என்றால் இனிமேல் எடுத்துப் போகாதீர்கள். இங்கேயே இருக்கட்டும் என்று கூறிவிட்டார்.

உண்மை தெரிந்ததும் அந்த சகோதரி மையத்திற்கு வருவதையே நிறுத்திக் கொண்டாள். அதன்பிறகு மையத்தில் ஒருபோதும் உணவு மீதம் ஆவதே இல்லை.

சென்னை நகரத்தில் மிகப்பிர பலமான உள்கட்டமைப்பு அலங்கார நிபுணர் ஒருவர் அவருடைய வியா பாரம் நஷ்டத்தில் இருப்பதால், வியாபாரம் நன்றாக நடக்க வேண்டும் என்பதற்காக பாபாவிடம் பிரார்த்தனை செய்து கொண்டு 48 நாட்கள் அவரும் அவரது மனைவியும் விரதம் இருந்து சீரடிக்கு வந்து பாபாவை தரிசிப்பதாக வேண்டிக்கொண்டனர்.

அவர் நமது குருவிற்கு மிகவும் வேண்டியவர். வெகுநாட்களாக குருவுடன் நட்புடன் இருப்பவர். மனைவியும், நானும் சீரடிக்கு வருகின்றோம். எங்கள் இருவருக்கும் டிக்கெட் போட் டுவிடவும். பணத்தை நான் நேரில் வந்து தருகிறேன் என்றவுடன் குருவும் தெரிந்தவர் என்பதால் இருவருக்கும் டிக்கெட் போட்டுவிட்டார்.

புறப்படும் நாள் வந்தது. நண்பரும் அவரது மனைவியும் இரயிலில் ஏறியதும், குருவிடம், பணம் வரவேண்டியிருக்கிறது. இன்று இரவிற்குள் எனது கணக்கிற்கு பணம் வந்துவிடும் சீரடிக்குச் சென்றதும் ஏ.டி.எ. மில் எடுத்துத் தந்து விடுகிறேன் என்று கூற, குருவும் சரி என்று கூறிவிட்டார்.

சீரடிக்கு வந்து சாயிநாதரையும் தரிசனம் செய்தாயிற்று. மூன்றாம் நாள் காலையில் அவராகவே குருவிடம் வந்து

இன்றுதான் பணம் வந்தது. இன்று எடுத்துக் கொடுத்துவிடுகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஆனால் அன்றும் அவர் பணம் எடுத்துக் கொடுக்கவில்லை.

நான்காம் நாள் காலையில் குருவிற்கு அவசரமாக பணம் தேவைப்பட, அவரே நேரில் சென்று, விபரத்தைக்கூறி பணம் கேட்க, நண்பரோ, பணம் வந்துவிட்டது சாய் ராம். ஆனால் எனது ஏடிஎம் கார்டில் ஏதோ பிரட்சனை. ஆகையால் மிசின் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறது. எங்களிடம் கைச்செலவிற்கு கூட பணம் இல்லை என்ன செய்வதென்று தெரியவில்லை. என்று புலம்பியிருக்கிறார்.

பணம் கேட்கச் சென்ற குரு என்னிடம் திரும்பி வந்து அவர்களின் பெயரைச் சொல்லி அவர்களின் யாத்திரைக் குண்டான பணம் வராது. அவர்களின் கணக்கை பாபாவின் கணக்கில் சேர்த்துவிடவும் என்று கூறிச்சென்று விட்டார். குரு எப் பொழுதும், எந்த விசயத்திலும் அது எப்படிபட்ட விசயமானாலும் அதிகப்பட்டசம் மூன்று நாட்களுக்கு மேல் அதன்மேல் நம்பிக்கை வைக்க மாட்டார். அதற்குள் நடக்கவில்லை என்றால் பாபாவிடம் விட்டுவிட்டு வேறு வேலையைப் பார்க்கச் சென்று விடுவார்.

ஆறு நாட்கள் யாத்திரையை முடித்துக் கொண்டு அனைவரும் ஊர் திரும்புகிறோம். சென்னை இரயில் நிலயத்தில் இறங்கிய கணவன் மனைவி இருவரும் குருவிடம் கூட சொல்லிக்கொள்ளாமல் புறப் பட்டு விட்டார்கள். இதுநடந்து எட்டுவ ருடமாகி விட்டது. தற்போது அந்த நண்பர் தனது வியாபாரத்தில் முன் னேற்றம் அடைய முடியாமல் ஒரு சூப்பர் மார்க்கெட்டில் கடைநிலை ஊழியனாக வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

பாபாவையே கடவுளாக பாவித்து பாபாவிடம் இருந்தே கருணையை எதிர்பார்த்து கடைசியில் பாபாவிற்கே துரோகம் எண்ணுகின்ற இதுபோன்ற பக்தர்களும் ஏராளமாய் இருக்கத்தானே செய்கின்றார்கள்.


இந்த சம்பவம் நடைபெற்று ஒருவருடம் கழித்து அந்த நண்பர் எங்களை ஒரு பாபா ஆலயத்தில் எதிர்பாராமல் சந்தித்துவிட்டார். குரு எப்போதும் போல் அவரைப் பார்த்தவுடன். என்ன சாய்ராம் நல்லா இருக்கீங்களா என்றார். ஆனால் அவரோ எடுத்தவுடன் சாய்ராம் ரொம்ப சிரமத்தில் இருக்கி றேன் டிக்கெட் காசு சீக்கிரத்தில் கொடுத் துவிடுகிறேன் சாய்ராம் என்றார்.


குருவோ, பரவாயில்லை சாய்ராம். உங்களது டிக்கெட் பணத்தை நீங்கள் எனக்கு தரவேண்டியதில்லை. நீங்கள் பாபாவிற்குத்தான் தரவேண்டும். உங்களுக்கு எப்ப பணம் ஏற்பாடு ஆகுதோ அப்ப அப்படியே எடுத் துட்டுப் போயி பக்கத்திலே உள்ள பாபா கோவில் உண்டியலிலே போட்டு விடுங்கள். சரியா? நான் வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டார்.

கடைசிவரை சீரடி பயணத்திற் குண்டான தொகையை கொடுக்காமல் ஏமாற்றிய நண்பரை நினைத்து குரு புலம்பாமல் அவரது பணம் நமக்கு வராது. அது தேவையும் இல்லை. அதை பாபாவிடம் விட்டுவிடுவோம். என்றவாறு அடுத்த வேலையில் கவனம் செலுத்திய நமது குருவிற்கு பகவான் சாயி என்ன கொடுத்தார் தெரியுமா? அதை அடுத்த மாதம் எழுதுகிறேன்.

– தொடரும்

ஸ்ரீ சாயிபாத மெய்யடிமை





பாபா பக்தர்களுக்கு நன்கு அறிமுகமானவரும், நாகப்பட்டினம், திருப்புலிவனம் போன்ற ஊர்களில் பாபாவிற்கு ஆலயம் அமைத்தவரும், அமெரிக்கா அரிசோனா மாகாணத்தில் பாபாவின் ஆலயம் உருவாகக் காரணமானவருமான அமரபூபதி (எ) திரு.சாய்பாத மெய்யடிமை அய்யா அவர்கள் கடந்த 13.03.2023 அன்று சாயிநாதரின் திருவடியை அடைந்தார்.

தனது இளமைக்காலத்தில் வெளிநாடுகளில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தவர், சீரடி சாயிநாதரால் ஈர்க்கப்பட்டு முழுமையான பாபாவின் அடியவராக மக்களுக்கு சேவை செய்ய ஆரம்பித்தார். தன் வாழ்நாளில் ஏராளமான சாய்பாபா பக்தர்களுக்கு வழிகாட்டியிருக்கிறார், உருவாக்கியிருக்கிறார்.

தன்னை நாடி வந்த பக்தர்களின் குறைகளுக்கு, பகவான் சாயிநாதரின் பெயரால் விபூதி அளித்து, அவர்களின் குறைகளை தீர்த்து ஏராளமான அதிசயங்களை செய்தவர். பக்தர்களால் விபூதி பாபா என்றும் அழைப்பட்டவர். அண்ணாரின் சமாதி நாகப்பட்டினம் மகாலட்சுமி ஸ்ரீ சாய்பாபா ஆலய வளாகத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது.

சுவாமிகளின் 48 வது நாள் நினைவேந்தல் நிகழ்சி நாகை மகாலட்சுமி ஸ்ரீ சாய்பாபா ஆலயத்தில் மிகச்சிறப்பாக நடைபெற இருக்கின்றது. பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சுவாமிகளின் ஆசியைப் பெறுவோம்.

ஓம் சாய்ராம்!

தொடர் –57

குருவைத் தேடி

சற்று நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு இப்போது என்ன செய்யப் போகின்றீர்கள் என்றார் என் மனைவி "சீரடி செல்கிறேன்" என்றேன். உண்மையாகவா என்று வியந்தார் என் மனைவி, ஆம் உண்மைதான். என் "சத்குருவைத் தேடி" என்றேன்.

அப்போது காலை மணி ஆறு. எப்போது செல்வதாக உத்தேசம் என்றார் என் மனைவி. இப்போதே என்றேன். யாராவது உங்கள் கூட துணைக்கு வருகின்றார்களா? இல்லை நான் மட்டும் தனியாகச் செல்கிறேன். யாரிடமாவது வழி விசாரித்துக் கொண்டீர்களா? இல்லை பாபா எனக்கு வழிகாட்டுவார் என்று நம்புகி றேன். ஓர் சிறிய கைப் பையில் காவி வேட்டியும் சட்டை ஒன்றையும் எடுத்து வைத்துக் கொண்டு உடனே புறப்பட்டுவிட்டேன்.

வாசல்வரை வந்து வழியனுப்பிய என் மனைவி என்னிடம் கூறினார். அப்பாடா ஒருவழியா சீரடிக்கு கிளம் பிட்டீங்க. இனிமே நமக்கு "நல்ல காலம்தான்". எல்லாத்தையும் பாபா பார்த்துக்கொள்வார். தைரியமாக போயிட்டு வாங்க! என்றார்.

கையில் இருந்த சொச்ச பணத்தை மனைவியின் கையில் கொடுத்துவிட்டு குழந்தைகளை பத்திரமா பார்த்துக்கோ என்று கூறியபடி வீட்டில் இருந்து வெளியே வந்து நடக்க ஆரம்பித்தேன்.

ஆயிரம் மைல்களுக்கு அப்பால் மனம் போன போக்கில் சுற்றித்திரிந்த



இக்குருவியின் காலில் கயிற்றை கட்டி இழுக்க ஆரம்பித்தார் சாயி. இப்பிறவி எடுத்தற்குண்டான உண்மையான வேலையை அப்போதுதான் நான் தொடங்கினேன்.

வீட்டைவிட்டு வெளியே வந்ததும் தான் என் மனதிற்குள் ஏதோ புயல் அடிப்பது போல் இருந்தது. என்ன நினைப்பில் சட்டென்று வியா பாரத்தை விட்டுவிட்டு வந்தோம். இரண்டு பெண்குழந்தைகள் இருக்கின்

றார்களே! கொஞ்சமாவது சேமித்து வைத்திருக்கலாமே! சே! தப்பு செய்து விட்டோமோ, பிழைக்க வந்த இடத்தில் பிழைக்கத் தெரியாமல் இருந்துவிட்டோமே, இனி என்ன செய்யப்போகின்றோம் என்றெல்லாம் மனம் சற்றே தடுமாற ஆரம்பித்தது.

யோசித்துக் கொண்டே பேரூந்து நிறுத்தம் வந்து விட்டேன். காலை நேரமாதலால் பேரூந்து நிறுத்தத்தில் யாரும் இல்லை. ஏனோ மனம் சற்று பதட்டமடைய ஆரம்பித்தது.கால்கள் நடுங்க ஆரம்பித்தது. மெல்ல சென்று இறுக்கையில் அமரவும் எங்கள் தெரு பூக்காரம்மா அங்கு வரவும் சரியாக இருந்தது.

என்னைப் பார்த்ததும் என்ன தம்பி காலையிலேயே எங்க கௌம்பீட்டீங்க என்றார் பூக்காரம்மா. நான் என் பதட்டத்தை மறைத்துக் கொண்டு சீரடிக்குமா என்றேன். சீரடிக்கா போறீங்க என்றார் வியப்புடன். ஆமாம்மா என்றேன். நானும் இருபது வருசமா இந்தா போகலாம், அந்தா போகலாம்னு பார்க்கறேன். அந்த சாமி எனக்கு அனுகிரகம் பண்ண மாட்டேங்குது.

முப்பது வருசமா சாயிபாபாவ மட்டும்தான் கும்புடுறேன். என்ன எப்பத்தான் கூப்புடுவாருன்னு பார்ப் போம். என்று அலுத்துக்கொண்ட பூக்காரம்மா சட்டென்று தன் கைப் பையை பிரித்து நூறு ரூபாயை எடுத்து என்னிடம் கொடுத்து, புண்ணியவான் நீயாவது போறீயே இந்த ரூபாயை உண்டியலிலே போட்டு எனக்காகவும் வேண்டிக்கோ தம்பி என்றார்.

பூக்காரம்மா என்னிடம் பேசியது எனக்கு என்னவோ சற்று இதமாக இருந்தது. உண்மைதான் வாழ்க்கையில் இன்பம் துன்பம் இயல்புதான். இருப்பினும் பூக்காரம்மா கூறியதுபோல், முப்பது வருடமாக சீரடி சென்று சாயியை தரிசிக்க முடியாதவர்கள் இருக்கும்போது. நான், இதோ புறப் பட்டுவிட்டேனே! ஆமாம் நான் புண்ணியவான்தான். இனி நான் எதற்காக வருத்தப்பட வேண்டும். இல்லை இனி நான் வருத்தப்பட போவதில்லை.

பேரூந்து வர நான் பூக்காரம் மாவிடம் விடைபெற்று சென்ரல் இரயில் நிலையம் வந்தடைந்தேன். புனே சென்று அங்கிருந்து சீரடி செல்ல வேண்டும் என்று ஏற்கனவே நான் கேள்விப்பட்டிருந்ததால் நேரே கவுண்டருக்குச் சென்று புனேக்கு டிக்கெட் ஒன்றை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றேன். நான் இதற்கு முன்பு இரயிலில் பயணப்பட்டு பழக்கமில்லை.

மணி காலை ஏழு. இரயில் நிலைய அறிவிப்பாளரின் குரல், சென்னை சென்ரலில் இருந்து கடப்பா, குண்டக்கல், ரெய்சூர், சோலாப்பூர், புனே வழியாக மும்பை செல்லும் மும்பை எக்ஸ்பிரஸ் ஐந்தாவது பிளாட்பாரத்தில் இருந்து 7.10 க்குப் புறப்படும் என்று ஒலித்தது. நான் விரைவாக ஐந்தாவது பிளாட்பாரம் சென்று மும்பை எக்ஸ்பிரசில் ஏறி அமரவும் இரயில் புறப்படவும் சரியாக இருந்தது.

முன்பதிவு இல்லாத பெட்டியாக இருந்தும் அன்று ஏனோ கூட்டம் இல்லாது காலியாக இருந்தது. ஒருவர் அமரும் சன்னல் ஓர இருக்கையில் வசதியாக அமர்ந்து கொண்டேன். நான் அமர்ந்ததும் என் பின்னாடியே வந்த டிப்டாப் ஆக உடை அணிந்த ஒருவர் என் எதிரில் அமர்ந்து

கொண்டார். நான் அவரை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. அவரும் என்னைப் பார்க்கவில்லை. இரயில் என் மனதைவிட மெதுவாகவே ஓடிக்கொண்டிருந்தது.

நான் சன்னலில் ஓடும் காட்சி களை பார்க்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தேன். நேரம் போகப் போக ஓடும் இரயிலின் சத்தமும், அதன் உள்ளே பயணிக்கும் மாறு பட்ட பயணிகளும், தன்னை நம்பியி ருக்கும் குடும்பத்திற்காக ஓடும் இரயி லில் வியாபாரம் செய்யும் சாகச வியா பாரிகளும், பிச்சைக்காரர்களும், என் கவனத்தை திருப்பி என் மனதை வருடிக்கொண்டிருந்தன.

ஜோலார்பேட்டை தாண்டியதும் டிக்கெட் பரிசோதகர் வந்தார். அனைவரும் அவரவர் டிக்கெட்டை நீட்ட, நான் என் டிக்கெட்டை சட்டைப்பையினில் பார்த்தேன். இல்லை. என்னது டிக்கெட்டை காணோமா, மனம் திரும்ப பட படப்பானது. சற்றே யோசித்துப் பார்த்தேன். டிக்கெட் கவுண்டரில் பணம் கொடுக்கிறேன். டிக்கெட்டை அவர் தூக்கிப் போட நான் அதைக் கவனிக்காமல் மீதி சில்லரையை மட்டும் வாங்கிக்கொண்டு டிக்கெட்டை எடுக்காமல் வந்துவிட்டேன்.

எனக்கு பயங்கர கலவரம் ஆகி விட்டது. பரிசோதகர் என்னருகே வரவும் எனக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. கைகால்கள் எல்லாம் படபடக்கின்றது.


என்ன சொல்வதென்று தெரியாமல் வாயில் இருந்து வார்த்தைகள் வர மறுக்கின்றன. என்னருகே வந்த பரிசோதகர் டிக்கெட் என்றவர் எதேச் சையாய் என் எதிரில் இருந்த டிப்டாப் ஆசாமியைக் கண்டதும் அவருக்கு வணக்கம் கூறினார்.

உடனே பரிசோதகரிடம் டிப்டாப் ஆசாமி மராட்டியில் என்னைப் பார்த்து ஏதோ கூறினார். பரிசோதகரும் தலையாட்டிவிட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டார். எனக்கு போன உயிர் திரும்ப வந்தது போல் இருந்தது. நான் எதிரில் டிப்டாப் ஆசாமியிடம் பேசலாம் என்றால் அவர் மராட்டியர் போலிக்கிறது. நமக்கு பாசை தெரி யாதே! என்ற உணர்வால் நான் அவரை நிமிர்ந்தே பார்க்கவில்லை.

இரயில் போய்கொண்டே இருக் கின்றது. என் வாழ்நாளில் மிக நீண்ட பயணம் இதுதான். ஒரு பக்கமாக சன்னலையே பார்த்துப் பார்த்து கழுத்து வழிக்கின்றது. காலையில் உணவு சாப்பிடவில்லை. மதியமும் பயணிகள் அனைவரும் ஏதேதோ சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். எனக்கு பசிக்கவே இல்லை. எதிரில் இருந்த டிப்டாப் ஆசாமியும் தன் பையில் இருந்து உணவை எடுத்து சாப்பிடுகிறார்.

இரண்டுமுறை என்னை முறைத்துப் பார்த்தாரே ஒழிய வேறு ஏதும் என் னிடம் பேசவில்லை. மாலை நான்கு மணிக்கு சற்றே பசிப்பதுபோல் இருந் தது. ஒரு தண்ணீர் பாட்டில் வாங்கி சிறிது அருந்தினேன். இரவாகிவிட்டது. இரவு உணவு நேரம். சற்றே பசிப்பது போல் இருந்தது. ஆனாலும் சாப்பிட பிடிக்கவில்லை. மீதம் இருந்த தண் ணீரைக் குடித்துவிட்டு அப்படியே சாய்ந்து கொண்டேன்.

இப்போது மனம் சற்றே அமைதி பெற்றிருந்தது. நான் வசித்த இடத்தை விட்டு வெகுதூரம் வந்துவிட்டேன். சீரடிக்குச் செல்கிறேன் என்ற சிந்த னையே என் மனக்கவலைகளை போக்கியது. நான் என் சற்குருவை



அடைந்துவிட்டேன். நாளை என் சற்குருவை கண்ணார கண்டு தரிசிக்கப்போகிறேன். இனி எனக்கு கவலை என்பதே இல்லை.

நான் வெறுமனே கண்களை மூடிக்கொண்டிருந்துவிட்டு கண்களை திறந்து பார்க்கின்றேன். எதிரில் இருந்த டிப்டாப் ஆசாமி என்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றார். நான் அவரைப் பார்ப்பதை தவிர்த்துவிட்டு கண்களை மூடிக்கொண்டு தூங்குவது போல் சாய்ந்து கொண்டேன்.

இரவு மணி மூன்று இரயில் மெதுவாக ஊர்ந்து கொண்டிருக்கின்றது. பயணிகளில் சிலர் எழுந்து கொண்டு தங்களது உடமைகளை சரி செய்து கொண்டி ருந்தனர். ஏதோ பெரிய ஊர் வருகிறது போலிருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு, நான் மீண்டும் கண்களை மூடிக் கொண்டேன்.

சற்று நேரத்தில் இரயில் நின்றது. அப்போது எனது தோளைத் தொட்டு யாரோ என்னை எழுப்பினார்கள். நான் கண்விழித்துப் பார்க்கின்றேன். எதிரில் இருந்த டிப்டாப் ஆசாமி தான் என்னை எழுப்பியிருக்கின்றார். நான் அவரை நிமிர்ந்து பார்த்தேன். புனே ஸ்டேசன், புனே ரயில்வே ஸ்டேசன், என்று இரண்டு முறை அழுத்திச் சொன்னார்.

நான் கண்களை கசக்கிவிட்டுக் கொண்டு சன்னலின் வழியே வெளியே பார்க்கின்றேன். புனே என்ற போர்டை பார்த்ததும் அரக்க பரக்க எழுந்து எனது பையை எடுத்துக் கொண்டு நானும் கீழே இறங்கினேன். கூட்டத்தோடு கூட்டமாக வெளியே வந்து வாசலை தாண்டும் சமயம் என் கையைப்பிடித்து யாரோ என்னை மீண்டும் உள்ளே இழுத்தார்கள். நான் திரும்பிப்பார்க்கிறேன். அதே டிப்டாப் ஆசாமிதான்.

ஒரு நிமிடம் உள்ளே வாங்க என்று அழைத்துப்போய் இருக்கையில் அமர வைத்தார். தம்பி நீங்க சீரடிதானே போறீங்க என்றார் தமிழில். எனக்கு வியப்பு, சார் நீங்க தமிழா என்றேன். ஆமாம் தம்பி சொல்லுங்க நீங்க சீரடிதானே போறீங்க என்றார் மீண்டும் ஆமாம் என்றேன்.

இப்ப மணி 3.30 பேரூந்து நிலையத் திற்கு போக டவுன் பஸ் காலையில் 5 மணிக்குத்தான் வரும். இப்ப நீங்க வெளியிலே போறது ஆபத்து. இங்க பிக்பாக்கெட் சாஸ்தி. அதனால



இங்கேயே பாத்ரூம் வசதிகள் இருக்கு உங்கள் வேலைகளை முடிச்சுட்டு உள்ளேயே இருங்கள்.

சரியாக 5 மணிக்கு ஸ்டேசன் வாசலிலேயே பஸ் நிலையத்திற்கு டவுன் பஸ் வரும். அதில் ஏறி சிவாஜிநகர் பேரூந்து நிலையத்தில் இறங்கிக் கொள்ளுங்கள். அங்கு சீரடிக்கு அரை மணி நேரத்திற்கு ஒரு பேரூந்து புறப்படும் அதில் ஏறி சீரடி செல்லுங்கள். என்றார்.

நான் அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு ரொம்ப நன்றி சார். என்றேன் பரவாயில்லே, ஒரு காலத்துலே நானும் உங்களை மாதிரி எல்லாத்தையும் இழந்துட்டு சீரடிக்குப் போறதுக்காக தனியா புனே இரயில் நிலையத்துலே நின்னவன்தான். இன்னிக்கு பாபா புண்ணியத்திலே ரொம்ப நல்லா இருக்கேன். அதான் சென்னையிலே இருந்து உங்களைப் பார்க்க, பார்க்க என்னைய பார்ப்பது போல இருந்தது. அந்த வியப்பிலேயேதான் உங்க கிட்ட எதுவும் பேச முடியாம வந்தேன்.

இனி நீங்க எதற்கும் பயப்பட வேண்டாம். பாபாகிட்டே வந்தாச்சுல்ல. பதட்டப்படாம பொறுமையா இருங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். சீரடியிலேயும் கவனமா பார்த்து இருங்க. சென்னை சென்ரல்லே டிக்கெட்டை தவறவிட்ட மாதிரி விட்டுடாதீங்க. இந்தாங்க உங்க டிக்கெட் என்று எனது டிக்கெட்டை என்னிடம் கொடுத்துவிட்டு சிரித்தார்.

சென்னையில் உங்களுக்குப் பின்னாடிதான் நான் டிக்கெட் எடுத்தேன். நீங்க பாக்கி பணத்தை மட்டும் எடுத்துட்டு டிக்கெட்டை எடுக்காமல் போயிட்டீங்க நான் தான் அதை எடுத்து வந்தேன்.

நான் இங்கே இரயில்வேயில்தான் வேலை பார்க்கறேன். அதான் பரிசோதகர்கிட்டே விளக்கம் சொல்லி உங்களை காப்பாத்தினேன். சரி எனக்கு நேரம் ஆச்சு நான் புறப்படுகின்றேன். பார்த்துப் போங்க என்று விடை பெற்றுச் சென்றார். அவர் எனக்கு அப்போது பாபா போலவே தெரிந்தார்.

அவர் கூறியதைப் போன்று, காலை கடன்களை முடித்துவிட்டு, இரயில் நிலயத்திலேயே காத்திருந்தேன். மணி 5 ஆனதும் எழுந்து வெளியே வந்தேன் டவுன் பஸ் தயாராக இருந்தது. அதில் ஏறி பேரூந்து நிலையத்திற்கு வந்தேன். சரியாக பத்து நிமிடத்தில் சீரடிக்கு பேரூந்து ஒன்று புறப்பட அதில் சென்று ஏறிக்கொண்டேன்.

பேரூந்து புறப்பட்டபோது பேரூந்தில் ஏழு பயணிகள் மட்டுமே இருந்தோம்.

அந்தப்பேரூந்து சீரடிக்கு நேராகச் செல்லாமல், சங்கம்நேர் வழியாக சுற்றிச் செல்லும் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

– (தொடரும்)

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'


தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

தாதா மகராஜ்

தாதா மகராஜ் ரத்னகிரி மாவட்டத்தில் பட்காவ்ன் என்னும் சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் நவநாத சித்தர்களின் சம்பிரதாயத்தை பின்பற்றினார். ஆன்மீகத்தில் மிக உயர்ந்த ஆன்மாவாகத் திகழ்ந்த அவர் ஏழை எளிய மற்றும் தாழ்த்தப் பட்டவர்களுக்கு பல உதவிகள் செய்து மிகவும் பிரபலமாக இருந்தார். அவரது இயற்பெயர் பாலகிருஷ்ண கேஷவ் வைத்யா

ஆயினும் அனைத்தையும் விட தீய ஆவிகளை விரட்டுவதில் அவர் மிகப் பிரபலமாக அறியப்பட்டார். தாதா மகராஜும், சாய்பாபாவும் சமகாலத்தவர்கள். ஆனால் இருவரும் நேரில் சந்தித்துக் கொண்டதில்லை. இருப்பினும் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மற்றவரைப்பற்றி முழுமையாக அறிந்திருந்தனர். உண்மையில் அவர்களுக்கிடையே டெலிபதி மூலம் கருத்துப் பரிமாற்றம் இருந்தது.



மும்பையில் ஒரு குடும்பஸ்தனை ஒரு தீய ஆவி பிடிந்திருந்தது. அந்த மனிதனைப் பாடாய்படுத்திய அந்த ஆவி அவனை மிகவும் கொடூரமானவனாகவும், வன் முறையாளனாகவும் ஆக்கி வைத்திருந்தது. காண்பவர்களை எல்லாம் உடலளவில் கடுமை யாக தாக்கி காயப்ப டுத்தினான்.

அவனது குடும்பத்தினர் பல்வேறு தீர்வுகளை முயன்று பார்த்தும் ஒரு பயனுமில்லை. நாளுக்கு நாள் அவனது வெறியாட்டம் அதிகரித்துக்கொண்டே சென்றதால் அவனை அவனது வீட்டார் கயிற்றால் கட்டி வைத்திருந்தனர்.

அதே சூழலில் அவனை சீரடிக்கு இழுத்துக் கொண்டு வந்தனர். அவனைப் பார்த்ததும் பாபா கூறினார் "அர்ரே! இவனை மிக வலிமையான பேய் ஒன்று பிடித்துக் கொண் டுள்ளது. என்னால் இவனை குணப்படுத்த முடியாது.

இவனை பட்காவ்னைச் சேர்ந்த பாலாவிடம் கூட்டிச்சென்று, தாதா மகராஜிடம் நான் அனுப்பியதாக கூறுங்கள்" என்றார்.

பாபாவின் அறிவுரையின்படி, அந்தக் குடும்பம் அவனை பட்காவ்னுக்கு அழைத்துச் சென்றது. பட்காவ்ன் எங்கிருக்கின்றது என்று விசாரித்து அங்கு இழுத்துச் செல்வதற்கு அவர்களுக்கு 15 நாட்கள் ஆனது. அவர்கள் அங்கு செல்வதற்கு முன்பாகவே, தாதா மகராஜ் தன் நெருக்கமான பக்தர்களிடம், சீரடி சாய்பாபா கொடுரமான வன் முறை குணம்கொண்ட ஒரு பைத்தியக் கார மனிதனை தன்னிடம் அனுப்பியுள் ளதாகச் சொன்னார்.

அந்த குடும்பத்தினர் அதற்கு முன் தாதா மகராஜை பாரத்ததில்லை. தவிரவும் தாதா சன்னியாசிகள் போல் உடை அணியவும் இல்லை. ஆதலால் அவர்களால் அவரை அடையாளம் காணமுடியவில்லை. ஆனால் பேய் பிடித்த அந்த மனிதன் அவரை சரியாக அடையாளம் கண்டு அவரின் பாதத்தில் சென்று விழுந்தான்.

தாதா மகராஜ் அந்த மனிதனை தன்னோடு எட்டு நாட்கள் தங்கி யிருக்கச் செய்து அவனை பீடித்திருந்த தீய ஆவியை விரட்டி அடித்து அவனை நலம் பெறச்செய்தார். அந்த குடும்பஸ்தன் பட்காவ்னை விட்டு செல்லும் போது அமைதியாக, தெளிந்த, சாந்தமான மனநிலையைப் பெற்றிருந்தான்.

ஒருசமயம் தாதாவின் பக்தர்கள் பட்காவ்னுக்கு வந்து அவரை தரிசித்துவிட்டு, அவரிடம் சீரடிக்குச் சாயிபாபாவை தரிசிக்கச் செல்ல அனுமதி கேட்டனர். இதைக்கேடட தாதா மகராஜின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது. உடனே அவர்களிடம், தங்க சரிகை வேலைப்பாடுகள் செய்த ஒரு சால்வையைக் கொடுத்து, " இந்த துணியை பாபாவின் கைகளில் கொடுத்து நமஸ்காரம் செய்யுங்கள் மற்றபடி வேறொன்றும் சொல்லத் தேவையில்லை" என்றார்.

அவரது பக்தர்களும் சீரடிக்குச் சென்று பாபாவை தரிசித்து அவரது கைகளில் தாதா கொடுத்த சால்வையை கொடுத்துவிட்டு ஒரு ஓரமாக நின்றனர் துணியைப் பெற்றதும்தான் தாமதம். பாபா ஆந்தத்தால் மகிழ்சி கூத்தாடினார்.

என் பாலா எனக்காக ஒரு சரிகை வேலைப்பாடுகள் செய்த சால்வையை அனுப்பியுள்ளார். ஆஹா அது எவ்வளவு அழகாயிருக்கிறது என்று கூறினார். பின்பு அந்த துணியை தன் தலையில் மீது சுற்றிக்கொண்டு துவாரகாமாயிக்கு வந்த ஒவ்வொரு பக்தர்களிடமும், பெருமிதத்துடன் அதைக் காணபித்து, பார் ! என் பாலா எனக்காக இந்த அழகிய பட்டா டையை அனுப்பியுள்ளார். என்று கூறி மகிழ்ந்தார்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
9941816692

தொடர் –21

சாய் சரவணன்

"அதி தேவதை"

சீரடியில் பொதுவான இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை செப்பனிட்டு பூச்செடிகளை நட்டு பூந்தோட்டமாக மாற்றினார்.

அங்கு பூக்கும் பூக்களைப் பறித்து இந்து கோவில்களுக்கும், முஸ்லீம்களின் புனித இடங்களுக்கும் தாராளமாக கொடுத்து உதவுவார். இவை எதற்குமே பாபா ஒருபோதும் எதையும் எதிர்பார்த்து செய்ததில்லை. அப்படி ஒரு நாள் ஜானகிதாஸ், தேவி தாஸ்,கங்காகீர், ஆனந்த்நாக், போன்ற மகாத்மாக்களின் ஒப்புதலை ஏற்று மகல்சாபதி, அப்பாபீல், துகாராம், தார்ஜீ, போன்றோர் பாபாவை நேசித்து வந்தனர்.

பாபா அப்போது ஒரு லீலை புரிந் தார். தண்ணீரால் விளக்கேற்றிய லீலைதான் அது. அந்த லீலையால் பித்துக்குளி பக்கீர் என மக்களால் அழைக்கப்பட்ட பாபா மந்திரசக்தி படைத்த சாது என்ற பெயரை எடுத்தார். அப்போதிருந்து சீரடி மக்கள் பாபாவை மதிக்க ஆரம்பித்தார்கள்.

அக்காலகட்டத்தில் தான், மகல்சாபதியும், துகாராம் தர்ஜீயும், அப்பாபீலும், பாபாவை ஒரு மகானாக பாவித்து மலர்கள், அட்சதைகள் கொண்டு பூஜித்தனர். மேலும் சந்தனம் பழங்கள் போன்றவற்றை சமர்ப்பித்தனர். ஆரம்பத்தில் பாபா இதை தடை செய்தார். எனினும் பின்னாளில் அவர்களது அன்பிற்கு அடிபணிந்தார்.



அதில் இருந்து பாபாவிற்கு எளிய முறையில் வழிபாடு தொடங்கியது. இந்த சிறு வழிபாடு மசூதியில் தொடங்கிய சில நாட்களில் பிரச்சனை சூழ்ந்து கொண்டது. இந்து முறைப்படி பாபாவிற்கு மசூதியில் வழிபாடு நடப்பதையும், அவர்கள் பூசும் சந்த னத்தை பாபா ஏற்பதைக் கண்டு இஸ்லாமியரான அப்துல்ரங்காரி கோபப் பட்டு பாபாவிடம், " பாபா இதென்ன பழக்கம், மசூதியில் இந்துக்கள் தங்க ளுக்கு சந்தனம் இடுவது தவறு என்றும் அதை இஸ்லாமியர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களே என்று கூறினார்.

அதற்கு பாபா, "சந்தர்ப்ப சூழ் நிலை களுக்கேற்ப மாறிக்கொள்ள வேண்டியதா

யிருக்கின்றது" என்று கூறினார். பாபாவிற்கு மசூதியில் செய் யப்படும் இந்துக்களின் வழிபாட்டை நிறுத்த சில இஸ்லாமியர்கள் திட்ட மிட்டனர்.

சங்கம்நேர் என்ற ஊறுக்குச் சென்று காஜி என்பவரை சந்தித்துப் பேசினர். காஜி என்பவரோ இதைத் தடுக்க ஒரே வழி பயமுறுத்தி தாக்குவது போல் பாசாங்கு செய்தால், பயந்து போய் பாபாவிற்கு பூஜை செய்ய மாட்டார்கள் எனத் தீர்மானித்து, இரண்டு மூன்று பயில்வான்களை தினமும் சீரடியில் பாபாவின் முன்பு கைகளில் தடியுடன் நிற்க வைத்தனர்.

வழக்கம்போல் மகல்சாபதி பாபா விற்கு பூஜை செய்ய வரும் போது பயில்வான்கள் மகல்சாபதியை மிரட்ட, அவர் மிகவும் பயந்து போய்விட்டார். அவர் உடனே மசூதியின் பின் பக்கம் சென்று சுவரில் பாபா இருப்பதைப் போல் பாவித்து சுவற்றிற்கு பூஜை செய்ய ஆரம்பித்தார்.

இதை அறிந்த பாபா, மகல் சாபதியிடம் வந்து இங்கு என்ன செய்கிறாய் என்று வினவ, மகல் சாபதி, பயில்வான்கள் உங்களுக்கு பூஜை செய்யக்கூடாது என்று மிரட்டி யதால் சுவற்றையே நீங்களாக நினைத்துக் கொண்டு பூஜை செய்கிறேன் என்று கூறினார்.

உடனே பாபா, "உள்ளே வா உள்ளே வந்து எனக்கு பூஜை செய், என் உடல் முழுவதும் சந்தனத்தைப் பூசு. யார் உன்னை அடிக்கின்றார்கள் என்று பாரக்கிறேன்" என்றவாறே தன்னுடைய குறுந்தடியை தரையில் ஓங்கி அடிக்க, அப்போது ஏற்பட்ட இடிபோன்ற சத் தத்தை கேட்ட பயில்வான்கள் பயந்து போய் ஓடிவிட்டனர்.

அ தன் பி ற கு மகல்சா ப தி , எப்போதும் போல் சிறிய அளவிலான வழிபாட்டை முடித்தார். அதில் இருந்து இந்து மக்களும் பயமின்றி பூஜை செய்து பாபாவை வணங்கி வழிபட்டனர். பிறகு சிறிய பூஜையின் மகத்துவம் ஓங்க சாயிபாபா ஒரு வழியைக் கண்டார். மாதவ் அட்கர் என்பவரை ஆட்கொண்டு அவர் மூலம் ஆரத்தி சாயிபாபா எனும் பாடலை எழுதி பாபாவின் வழிபாட்டில் சேர்க்கப்பட்டது.

இதை பாபா அங்கீகரிக்கும் வகையில்1904 ல் நானாவின் மகள் பிரசவ வேதனையில் இருந்து காக்க நானா இந்த பாடலைப் பாடி அதன் முழுமையான பலனை அடையச் செய்தார் என்பதை நாம் நன்கறிவோம். இருப்பினும், நம் சாயி தேவனுக்கு மிகவும் பிடித்தமானது பக்தி என்ற தூய்மையான உணர்வு, மற்றும் பிரேமை. அது பாபாவிற்கு சரிவர கிடைக்காமலே இருந்தது.

அதற்கெனவே நம் அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி சீரடியில் வந்து தங்கினாள். ஆயியின் சொல், செயல், எண்ணம் யாவும் பாபாவிற்கே தவிர வேறு எந்த சிந்தனையிலும் ஆயியின் மனது ஈடுபடாது.

நானா சாகேப் அன்னையிடம் இருந்து விடைபெற்று பாபாவைக் காண துவாரகாமாயிக்கு சென்றதாக கண்டோம். மசூதிக்குச் சென்று நானா பாபாவைச் சந்தித்தார். நானாவைக் கண்ட பாபா, வா! நானா, என் அருகில் அமர்ந்து கொள். என்று கூறி அவரது குடும்ப நலன்களைப் பற்றி பேசினார். திடீரென்று, "நானா மக்கள் எது உண்மையான பக்தி, எது பொய்யான பக்தி என்பதை அறியமாட்டார்கள்.

அவர்களது மனம் வெறுப்பாலும், கோபத்தாலும், பொறாமையாலும் நிரப்பப்பட்டிருக்கிறது. என்ன செய்வது இந்த மதி கெட்ட சீவன்களை என்று கூறினார்.

நானாவால் பாபா கூறியதை கிரகிக்க முடியவில்லை. உடனே பாபா, நானா நீ மீண்டும் சாலாவிற்கு சென்று ஆயியைப் பார்த்துவிட்டுப் போ என்றார். நானா பாபா கூறியதை தட்டமுடியாமல் மீண்டும் ஆயியின் வீட்டிற்கு சென்ற சமயம், அன்னை துகாராம் மகராஜ் பாடிய பாடலைப் பாடிக்கொண்டிருந்தாள்.

சற்குரு உண்ட மிச்சமே
அடியேன் விரும்பும் பிரசாதமே!
அவர் தம் முற்றத்தில் புரளுவதே
அடியேன் செய்யும் பிரதஷிணமே!
தொண்டரின் மிதியடி ஆவனே
அத்தகு பிறவியை வேண்டுவேனே!
தேவா இதை நீ தந்தருளேன்
இதுவன்றோ எமக்கு இனியதானதே!
தொண்டரின் அடிப்பொடி என்மீதிலே
பட வேண்டியே நானும் தொழுகிறேன்!
நிலையற்ற உலகம் என்றுணர்ந்தேன்
உள்ளத்தை உன்பால் வைத்திட்டேன்
ஜெய ஜெய விட்டலா! ஜெய் ஹரி விட்டலா!

என்றபடி தன்னை மறந்து பாடினாள். நானாவோ வாசலில் நின்றபடி ஆயியை பார்த்த வண்ணம் இருந்தார். அதே சமயம் லட்சுமிபாய் பாபா ஆயிக்கு தந்த பிரசாதத்தை எடுத்து வந்தாள். கண்ணைத் திறந்த ஆயி பாபா வின் பிரசாதத்தை பிரேமையோடு வாங்கிக் கொண்டாள். பிறகு ஆயி, நானாவைப்



பார்த்து, பெரியப்பா நானே உங்களை காண வேண்டும் என்றிருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள் என்றாள். உடனே நானா, என்ன விசயம் ஆயி ஏதேனும் என்னால் ஆக வேண்டுமா என வினவினார்.

ஆயி கூறினாள்,"என் பிரபு வாழும் புண்ணிய பூமி இது. அவரது திருவடி படும் அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கென சில பொருட்கள் வேண்டும் என்றாள்" நானாவும் சரியம்மா உனக்கு தேவையான பொருட்களை நானே வாங்கித் தருகிறேன் என்று வாங்கிக் கொடுத்து விட்டே சீரடியில் இருந்து சென்றார்.

நானா வாங்கிக்கொடுத்த பொருட்களைக்கொண்டு ஆயி, புழுதி படர்ந்த தெருக்களில் சுத்தம் செய்து குப்பைகளை பெருக்கி அள்ளி ஊர் எல்லையில் போட்டு எரித்தாள். கண்ட இடங்களில் ஓடும் சாக்கடைகளை சுத்தம் செய்து ஒழுங்கு படுத்தினாள். குண்டும் குழியுமாக உள்ள தெருக்களை மண்ணை நிரப்பி

சமப்படுத்தினாள்.

ஆயியின் சேவைகளை சீரடியில் உள்ள ஒரு சிலர் புரிந்து கொண்டனர். வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்கள் சீரடியின் சுத்தத்தைப் பற்றி புகழ்ந்து பேசினர். அன்னை ஒரு நாள் தெருவை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, அவ்வழியே சென்ற சாயி கூறினார். ஆயி நீ செய்யும் இந்தப்பணிகள் மிகவும் சிறந்தது. எனக்கு மிகவும் பிரியமானது. சேவை செயவதில் முத்தேவியரைப் போல நீ மகிமை வாய்ந்தவள். எதிர்காலத்தில் நீ வரலாற்றில் இடம் பெறுவாய் என வாழ்த்திச் சென்றார்.

அன்னையின் சரணாகத பக்தியின் முன் எதை வேண்டுமானாலும் செய்யும் சாமர்த்தியம் பாபாவின் அருளால் அன்னைக்கு இருந்தது. ஆயியின் சேவையினைக் கண்ட யாவரும் ஆச்சரியப்படுவார்கள். இப்படியாக தனது குரு சேவையின் பணிகளை திறம்பட உத்வேகத்துடன் ஆயி செய்து கொண்டிருந்தாள்.

- (தொடரும்)



மகல் சாபதி

***சா**யி இயக்கத்தின் ஒளி விளக்கு மகல் சாபதி. முதலில் பைத்தியக்காரன் என்று கருதப்பட்ட யாருமே அறியாத பக்கீர் சாயியை முதலில் அறிந்தவர். ஆரம்ப கல்வி மட்டுமே கற்றவர். பொற்கொல்லர் பிரிவைச் சேர்ந்தவர். கண்டோபா கோவில் பூசாரி. அந்தக் கோவிலின் அருகில் சாயி வந்திறங்கிய போது "ஆவோ சாயி" என்ற உள்ளன்புடன் அழைத்தவர்.*

சாயி என்ற அந்தப் பக்கீருக்கு பெயர் சூட்டியவர்.கண்டோபா ஆலயத்திற்குள் பாபா நுழைய முயன்றதை எதிர்த்து ஆட்சேபனை செய்தாலும் பின்னாளில் பாபாவின் மிகச்சிறந்த அன்பராகவும், தீவிர பக்தராகவும் மாறிவிட்டார். நீண்ட காலத்திற்கு தனக்கு பூசை செய்ய சாயி பாபாவால் அனுமதிக்கப்பட்டவர்.

பாபாவுடனான தொடர்பு மிக நெருக்கமானது. மகல் சாபதியும் அவர் குடும்பத்தினரும் பட்டினியால் வாடிய போதும் அவர் அன்னத்தை தவிர வேறு எதையும் பெற மறுத்தவர். மகல் சாபதியின் வாழ்க்கையில் பாபாவுடன் தொடர்பு கொண்ட ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் பாபா தம் உடலை விட்டு செல்ல முயற்சி செய்து மூன்று நாட்களுக்கு பிறகு உயிர் திரும்பியது. அதுவரை அவரது உடலை பத்திரமாக பாதுகாத்த பொறுமைசாலி.

அக்கல்கோட் மகராஜ்


சுவாமி சமர்த்தர்

ஸ்ரீதத்தாத்ரேயாவின் அவதாரம் என்று நம்பப்படும் இந்த ஆன்மீக குருவின் பெயர்,சுவாமி சமர்த்தர் என்று பிரபலமாக அழைக்கப் படுகிறது. 1878 ஆம் ஆண்டு அவர் தனது மரணம டையும் உடலை விட்டு வெளி யேறினார்.

அக்கல்கோட் என்ற ஊரில் தொடர்ந்து 22 ஆண் டுகள் மக்களுக்கு அருள் பாலித்து வாழ்ந்ததினால் "அக்கல் கோட் மகராஜ்" என்றும் அழைக்கப் படுகிறார், அக்கல்கோட் மகாராஷ் டிரா மாநிலத்தில் சோலாப்பூர் மாவட் டத்தில் அமைந்துள்ளது .

ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவின் பக்தர் களுக்கு 'சுவாமி சமர்த்தின்' வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொண்டால் வியப்பை அளிக்கும். இந்த இரு மகான்களின் வாழ்க் கையை ஒப்பிட்டுப் பார்த்தால், இரு வரின் வாழ்க்கை மற்றும் செயல்களில் அவர்களின் கற்பித்தல் முறைகள், அவர் களின் அணுகுமுறை யின் உலகளாவிய தன்மை மற்றும் அவர்கள் செய்த அற்புதங்கள் ஆகியவை அடங்கும்.

ஒத்துப்போகாத ஒருவரின் விமர்சன அணுகுமுறை கூட இறுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் வாழ்ந்த இந்த இரண்டு ஆன்மீக குருக்களின் ஒட்டுமொத்த பங்கும் ஒரே மாதிரியாக இருந்தது என்றே விமர்சிப்பார். சிறந்த



ஆன்மீக பகுப்பாய்வு செய்யும் திறன் கொண்ட ஒருவர், இருவருக்குமிடையே உள்ள திகைப்பூட்டும் யதார்த்தத்தை எதிர்கொள்வார். உண்மை என்னவென் றால், சுவாமி சமர்த்தரும் ஸ்ரீ சீரடி சாய்பாபாவும் இரண்டு ஸ்தூல உடல்க ளில் ஒரே தெய்வீக ஆவியின் வெளிப் பாடுகள்.

இந்த இரண்டு புனிதர்களைப் பற்றியும் வெவ்வேறு எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட பல எழுத்துக்கள், இருவருக்கும் இடையிலான நுட்ப மான பல தொடர்புகளைப் பற்றி



விவரிக்கின்றன. மகாசமாதிக்கு சற்று முன்பு சுவாமி சமர்த்தர், தனது சீடர்களில் ஒருவரிடம், "இனி நீங் கள் சீரடியில் உள்ள ஸ்ரீ சாயியை வணங் குங்கள் எதிர்காலத்தில் நானும் சீரடி யிலேயே தங்குவேன்" என்று கூறினார்.

ஸ்ரீ சீரடி சாய்பாபாவைப் போன்றே சுவாமி சமர்த்தரின் ஆரம்பகால வாழ்க்கையும் மர்மங்களால் மூடப்பட் டிருக்கிறது.அந்த விஷயத்தில், ஸ்ரீ சீரடி சாய்பாபாவின் முதல் வருகை யும், அவரின் ஆரம்பகால வாழ்க்கை கூட ஒருவரும் அறியாததாய் உள்ளது. இருப்பினும், அவர் மீது நம்பிக்கை வைத்து, பல்வேறு வழிகளில் அவருடைய அருளை அனுபவிப்பவர்களுக்கு, ரிஷி மூலம் அறியப்படவேண்டியதில்லை அல்லவா?

கிறிஸ்து ஒரு கன்னி தாயிடமிருந்து பிறந்தார் என்பதை அறிவியல் உலகம் ஒப்புக்கொள்வதில்லை. இருப்பினும் துன்புறும் மனிதகுலத்தின் வலிகளை குறைத்து அவர்களை ஆன்மிகப் பாதையில் அழைத்துச் சென்றார் அல்லவா? அதை ஒப்புக்கொள்ளத் தானே வேண்டும்.

ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி, சுவாமி சமர்த்தரின் வருகைக்கு சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஸ்ரீ தத்தாத்ரேயரின் முந்தைய அவதாரம் என்று நம்பப்படுகிறது . மிகவும் பிரபலமான புத்தகங்களில் ஒன்றான

'குரு சரித்ரா' வில் அவரைப் பற்றிய பல தகவல்களைத் தருகிறது. அதன்படி ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி, பல வருடங்களாக ஏராளமான மக்களுக்கு உதவி செய்து அவர்களை ஆன்மீக ரீதியில் உயர்த்திய பிறகு, இமயமலைக்குச் சென்று சமாதி நிலையில் ஆழ்ந்தார்.

சமாதி நிலையில் சுமார் முந்நூறு ஆண்டுகள் இருந்தார். காலப்போக்கில் ஒரு பெரிய எறும்புப் புற்று அவரின் மேல் வளர்ந்து வெளியுலகத்தில் இருந்து மறைந்து போனார். ஒரு நாள் தற்செயலாக எறும்பு மலையைச் சுற்றி வளர்ந்திருந்த புதர்கள் மீது ஊமை யனான விறகு வெட்டியின் கோடாரி விழுந்தது. கோடரியை எடுத்த போது அதில் ரத்தக்கறை இருப்பதை கண்டு

அதிர்ச்சி அடைந்தான் விறகு வெட்டி.

உடனே அவர் எறும்பு புற்றை அகற்றிப் பார்த்தபோது, புற்றுக்குள் தியானத்தில் இருக்கும் ஒரு யோகி யைக் கண்டான். யோகி மெதுவாக கண்களைத் திறந்து, ஊமையனான விறகு வெட்டியை ஆறுதல்படுத்தினார், அவர் தனது ஆன்மீகப் பணியை மீண்டும் தொடங்க உலகில் மீண்டும் தோன்றுவது தெய்வீக விருப்பம் என்று கூறினார். இந்த யோகி, தனது புதிய பாத்திரத்தில் "சுவாமி சமர்த்தர்" என்று அறியப்பட்டார்.

அக்கல்கோட்டில் குடியேறுவதற்கு முன்பு, ஸ்வாமி சமர்த்தர் பல இடங்களுக்குச் சென்றார். இமயமலைப் பகுதிக்குச் சென்றபோது அவர் சீனாவுக்குச் சென்றார். அதன்பிறகு, அவர் தெற்கில் உள்ள பூரி, பெனாரஸ், ஹரித்வார், கிர்னார், கதியவாட் மற்றும் ராமேஸ்வரம் போன்ற இடங்களுக்குச் சென்றார்.

மகாராஷ்டிராவின் சோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள பந்தர்பூருக்கு அருகிலுள்ள மங்கள்வேதா என்ற நகரத்திலும் அவர் தங்கினார், இது முன்பு டோமோஜிபந்த் மற்றும் சோகமேலா போன்ற புகழ்பெற்ற துறவிகள் வசித்து வந்தது. அவர் 1856 இல் அக்கல்கோட்டிற்கு வந்தார், அங்கு அவர் 22 ஆண்டுகள் தனது உடல் இருப்பைத் தொடர்ந்தார் . சிந்தோபந்த் டோல் என்ற ஒருவரின் அழைப்பின் பேரில் அவர் அக்கல்கோட்டுக்கு வந்து ஊருக்கு ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் தங்கினார்.

நாம் அற்புதங்கள் என்று கூறுவது கடவுளை உணர்ந்தவர்களின் இயல் பான செயல் முறைகளைத்தான். அந்தப் பகுதியைச் சேர்ந்த ரிசல்தார் என்ற முஸ்லீம் நபர், அவரை சோதிக்க விரும்பி, சுவாமிக்கு புகையிலை நிரப்பப்படாத மண்ணால் ஆன புகை பிடிக்கும் குழாய் ஒன்றை வழங்கி புகைபிடிக்கும்படி கூறினார்.

சுவாமி சமர்த்தரும் ஒன்றும் நடக்காதது போல் ஒரு விளக்கை ஏற்றி வைத்து விட்டு காலியான புகை குழாயை வாயில் வைத்து புகைக்க ஆரம்பித்து அதிகமான புகையை ஊதித் தள்ளினார். அவர் ஒரு மேம்பட்ட ஆன்மீக நபர் என்பதை உணர்ந்த ரிசல் தார் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, சோளப்பா என்ற ஒருவரின் வீட்டில் அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார். இந்த சிறிய வீட்டில்தான் சுவாமி சமர்த்தர் தனது வாழ்வின் கடைசி வரை வாழ்ந்தார்.

விரைவிலேயே, ஸ்வாமி சமர்த்தர் ஆன்மீக குரு என்ற பெயர் எங்கும் பரவியது, பக்தர்கள் அவரது ஆசிர்வா தத்தைப் பெற வந்தனர். அவர் மறை முகமாகச் சொல்லும் அவரது பல சைகைகள் மற்றும் மாயக் கூற்றுகள், அவற்றின் அர்த்தங்கள் பிற்காலத்தில் தெளிவாகத் தெரிந்தாலும், சாதாரண மக்களுக்குப் புரியவில்லை.

அவர் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பார்சிகள் அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்தினார். அவரது கருணை எப்போதும் ஏழைகள், மற்றும் சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டது. தசரா மற்றும் மொஹரம் போன்ற இந்துக்கள் மற்றும் முஸ்லீம் பண்டிகைகள் இவரால் கொண்டாடப்பட்டது.

சீரடியைப் போலவே, அக்கல் கோட்டிலும் வியாழக்கிழமை ஒரு சிறப்பு கொண்டாட்ட தினமாக மாறியது. சீரடி சாய்பாபாவைப் போல,

அக்கல்கோட்டின் சுவாமி சமர்த்தர் வெகுஜன உணவுகளை விரும்பினார். ஒருமுறை, ராம்பூர் என்ற இடத்திற்குச் சென்றபோது, ராவாஜி என்ற பக்தர், சுவாமி சமர்த்தரின் வருகையைக் கொண்டாடும் விதமாக, 50 பேருக்கு உண்டான உணவினை தயார் செய்தார்.

இருப்பினும், சுவாமி சமர்த்தர் வந்த செய்தியைக் கேட்டு அக்கம் பக்கத்து கிராமங்களில் இருந்து நூற்றுக் கணக்கான மக்கள் கிராமத் திற்கு விரைந்தனர். தன் வீட்டு வாசலில் இவ்வளவு கூட்டம் இருப் பதைக் கண்டு ராவாஜிக்கு பீதி ஏற்பட்டது. அவருடைய அவல நிலையைக் கண்டு நெகிழ்ந்த ஸ்வாமி சமர்த்தர், ராவாஜியிடம் சில வெற்றுக் கூடைகளைப் பெற்றுத் தரும்படி கேட்டார். சந்தையில் இருந்து கூடைகள் கொண்டு வரப்பட்டது.

அதில் கண்டோபா, அன்னபூரணி போன்ற அனைத்து தெய்வங்களின் சிலைகள் வைக்கப்பட்டு, சப்பாத்தி ரொட்டி, போன்ற உணவுப் பொருட்கள் குவிக்கப்பட்டன. ராவாஜியும் அவரது மனைவியும் இந்தக் கூடைகளைச் சுமந்துகொண்டு துளசிச் செடியைச் மூன்று சுற்று சுற்றி வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

அதன்பிறகு, இந்த கூடைகளில் இருந்து உணவைப் பார்க்காமல் விருந்தினர்களுக்கு பரிமாறச் சொன் னார்கள். 50 பேருக்கு சமைக்கப்பட்ட உணவை 500 பேருக்கு மேல் உண வருந்தினர். வந்திருந்த அனைவரும் சாப்பிட்டு முடித்ததும், சுவாமி சமர்த்தர் உணவருந்தினார். இதற்கு 'அன்னபூர்ணா சித்தி' என்று பெயர்.



ஸ்வாமி சமர்த்தர் தன்னிடம் வரும் அனைத்து மக்களின் மனதையும் படிக்கும் திறனைக் கொண்டிருந்தார், மேலும் அவர்களின் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் அறிந்திருந்தார்.பாபா சாகேப் ஜாதவ், என்ற சுவாமியின் அடியவர் ஒருவர், சுவாமிகளை தரிசிக்க வந்தார். அவரைப் பார்த்த சுவாமி சமர்த்தர் “ஓ பாட்டர்! உங்கள் பெயரில் சம்மன் வருகிறது”. என்று கூறினார்.

சுவாமி சமர்த்தரின் நெருங்கிய வட்டத்தில் இருந்த குயவர் என்பவர் இந்த வாக்கியத்தின் பொருளைப் புரிந்துகொண்டு மிகுந்த துயருற்றார். அதாவது ஜாதவ் மரணமடையப் போகிறார் என்பதை அறிந்த குயவர் அவரை மரணத்திலிருந்து காப்பாற்றி சுவாமி சமர்த்தருக்கு சேவை செய்ய அருளும்படி மன்றாடினார்.

குயவரின் வேண்டுதலால் பக்தி

பரவசமடைந்த சுவாமி சமர்த்தர் வானத்தை அண்ணாந்து பார்த்து, கண்ணுக்கு தெரியாத ஒருவரிடம் பேசுவது போல் முணுமுணுத்தார். திடீரென்று, அருகில் சென்ற காளையை நோக்கி கையை காட்டி, உரத்த குரலில் "காளையிடம் போ" என்றார். திரளான பக்தர்கள் முன்னிலையில், அந்த காளை திடீரென கீழே விழுந்தது இறந்தது.

ஜாதவ், மரணத்தில் இருந்து தப்பித்து சுவாமி சமர்த்தின் சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.இதேபோல்,சோலாப்பூரைச் சேர்ந்த ஐரோப்பியப் பொறியாளர் ஒருவர் தனக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும் என்ற தீவிர நம்பிக்கையுடன் சுவாமியைத் தரிசித்தார். அவர் ஸ்வாமி சமர்த்தரை அணுகியதும், சுவாமி அவரைப் பார்த்து ஒரு வருடத்தில் உனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று கூறினார். மிகச்சரியாக அவருக்கு ஒருவருடத்தில் மகன் பிறந்தான்.

சத்குருக்கள் அல்லது ஆன்மிக மாஸ்டர்கள் எப்போதும் தங்களை சந்திக்கும் மனிதர்களின் தரத்தை மாற்ற முயற்சி செய்கிறார்கள் . பொருள் பலன்களைத் தவிர, ஆன்மீக ரீதியில் அவர்களை உயர்த்த முயற்சி செய்கிறார்கள். ஒருமுறை ஒரு யூத மருத்துவர்,ஜே.ஜே.மருத்துவமனையில் கண் நிபுணராகப் பணிபுரிந்தபோது, சுவாமி சமர்த்தை சந்தித்தார்.

மருத்துவர் தனது தொழில்முறைத் திறனைப் பற்றி மிகவும் பெருமைப் பட்டார். அவரைப் பார்த்த ஸ்வாமி சமர்த்தர், "சொல்லுங்கள் டாக்டர், நீங்கள் சிகிச்சை செய்த கண் நோயாளிகளில் எத்தனை பேர் கண் பார்வையை இழந்திருக்கிறார்கள்" என்று கேட்டார். இந்த வாக்கியம் மருத்துவரிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தன்னிடம் சிகிச்சை பெற்றாலும் பலர் பார்வையை நிரந்தரமாக இழந்திருப்பதை உணர்ந்தார். அவரது அகங்காரம் உடனடியாக மறைந்து, அதன் பிறகு அவர் ஸ்வாமி சமர்த்தரின் பக்தரானார். ஓய்வுக்குப் பிறகு மருத்துவர் அக்கல்கோட்டில் குடியேறி தனது கடைசி வரை சுவாமிக்கு சேவை செய்தார்.

நீண்ட காலமாக ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்ந்த ராமானந்த் பிட்கர் என்ற ஒருவர் சுவாமி சமரத்தரின் கருணையால் பிட்கர் மகாராஜ் என்ற துறவியாக மாற்றப்பட்டார், அவரது வழிகாட்டுதலின் கீழ் ஸ்ரீ பாலப்ப மகராஜ், ஸ்ரீ கங்காதர் மகராஜ், ஸ்ரீ கஜானன் மகராஜ் மற்றும் பலர் ஆன்மீக மேன்மைக்கு உயர்ந்து சமூகத்திற்கு நிறைய பங்களித்தனர்.

சுவாமி சமர்த்தர் ஒரு நாள் திடீரென்று தனது உடல் இருப்பை விட்டு வெளியேற வேண்டிய நேரம் வந்துவிட்டதாக அறிவித்தார். இந்து நாட்காட்டியின்படி அது சைத்ர சுதா த்ரயோதசி, ஷகா 1800 அதாவது கி.பி. 1878 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு, பத்மாசனத்தில் அமர்ந்து தனது கடைசி வார்த்தைகளை உச்சரித்தார். "யாரும் அழக்கூடாது நான் எப்போதும் எல்லா இடங்களிலும் இருப்பேன், பக்தர்களின் ஒவ்வொரு அழைப்புக்கும் நான் பதிலளிப்பேன்" . சீரடியில் உள்ள ஸ்ரீ சாய்பாபாவும் தனது மகாசமாதிக்கு முன் இதையே கூறினார். அவர் தனது மொத்த உடலை விட்டு வெளியேறுவதற்கு சற்று முன்பு, உணர்ச்சிவசப்பட்ட கேசவ் நாயக் என்ற பக்தர் ஒருவர்,



"மகராஜ், நீங்கள் போகிறீர்கள், எங்களுக்கு இனி யார் பாதுகாப்பு அளிப் பார்கள்?" என்று கேட்டார். சுவாமி சமர்த்தர் அவருக்கு ஒரு ஜோடி செருப்பைக் கொடுத்து, "எதிர்காலத்தில் நான் அகமது நகர் மாவட்டத்தில் உள்ள சீரடியில் தங்குவேன்" என்றார்.

மற்றொரு பக்தரான கிருஷ்ண அலி பக்கர், அக்கல்கோட்டுக்குச் சென்று சுவாமி சமர்த்தரின் பாதுகைகளை வணங்க முடிவு செய்தார். அதன்பிறகு அவர் கனவில் தோன்றிய சுவாமி சமர்த்தர், "இப்போது நான் சீரடியில் இருக்கிறேன், அங்கு சென்று என்னை வணங்குங்கள்" என்று கூறினார் . பக்கர் சீரடிக்குச் சென்றார், அங்கு அவர் ஆறு மாதங்கள் தங்கினார்.

பின்னர், அவர் ஸ்ரீ சாயிபாபாவிடம் விடைபெற்றுக் கொண்டு தான் அக்கல்கோட்டுக்குச் செல்ல விரும் புவதாக கூறியபோது, ஸ்ரீ சாயி அவ ரிடம் "அக்கல்கோட்டில் என்ன இருக் கிறது, அக்கல்கோட் மகராஜ் இங்கே தான் தங்கியிருக்கிறார்" என்று கூறினார். சுவாமி சமர்த்தருக்கும் சீரடியின் ஸ்ரீ சாய்பாபாவுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பதை பாக்கர் உணர்ந்தார், அவர் தனது முந்தைய கனவை நினைவு கூர்ந்தார்.

சுவாமி சமர்த்தரின் தெய்வீக விளை யாட்டு அவரது மகா சமாதியுடன் முடிவடையவில்லை. அவரது பக்தர்கள் இன்று வரை அவரது கண்ணுக்குத் தெரியாத உதவியின் அற்புதங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஐய ஐய ஸ்ரீ சுவாமி சமர்த்த!

ஹரி விநாயக் சாதே



ராவ் பகதூர் எச்.வி.சாதே மும்பை மாநிலத்தில் உதவி மாவட்டத் தலைவர். பாபா இயக்கத்திற்கு அவர் செய்த முதன் முதலான மகத்தான பணி சீரடியில் வெளியூர் பக்தர்கள் வந்து தங்க வசதியாக சாதே வாதா என்ற தங்குமிடத்தை கட்டியதே.

முதல் மனைவி இறந்த பிறகு தமது 50 வது வயதில் மறுமணம் செய்து கொண்டார். முதல் மனைவி மூலம் பெண் குழந்தைகளே பிறந்தன. ஆண் வாரிசு இல்லை. மறுமணம் செய்து கொள்வதில் அக்கறை காட்டாத காரணம் அவள் மூலமாகவும் தனக்கு பெண் குழந்தைகளே பிறக்குமோ என்ற ஐயத்தினால்தான். ஆனால் பாபாவின் அருளால் இரண்டாவது மனைவியின் மூலம் 1913ம் ஆண்டு ஆண் குழந்தை பிறந்தது. மேகா என்ற சிவபக்தனை பாபாவை தரிசிக்க அனுப்பி வைத்தவர் சாதே.

பயணக்கட்டுரை

அந்தியூர் ஸ்ரீ ஆனந்த சாயிபாபா



சென்ற மாதம் 9.03.23 அன்று குருவுடன் ஆனந்த பயணமாக ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஸ்ரீ ஆனந்த சாய்பாபா ஆலயத்திற்கு சென்று வந்தோம். இந்தப் பயணம் மறக்கமுடியாத ஆனந்தப் பயண மாகவே அமைந்தது. அதை வாசகர் களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

நமது குருவிடம் அந்தியூர் அன்புச்ச கோதரர் திரு.விஸ்வநாதன் அவர்கள், 2020 செப்டம்பர் மாதம் அந்தியூரில் பாபாவிற்கு ஓர் ஆலயம் எழுப்ப வேண்டும் என்று பிரார்த்தனை வைத்தபோது, 2021 தைமாதம் நீங்கள் பாபாவிற்கு ஆலயம் எழுப்புவீர்கள் என்று வாக்கருளியிருக்கிறார்.

அப்போது கொரோனா காலம் முடிந்து மக்கள் அனைவரும் பொருளா தார சிக்கலில் இருந்த காலம். திரு. விஸ்வநாதன் அவர்களோ ஏற்கனவே ஏகப்பட்ட கடன் பிரச்சனைகளில் சிக்கித் தவித்து வந்தார். அதில் பாபா விற்கு கோவில் கட்டியே தீரவேண்டும் என்ற வைராக்கியம் வேறு அவரைப் பாடாய்ப்படுத்தியது.

குருவின் வாக்கையே வேதவாக்காக எடுத்துக்கொண்டு கையில் ஒரு ரூபாய் கூட இல்லாமல், ஆலயத்திற்கு இடம் பார்க்க ஆரம்பித்துள்ளார். கையில் பணமில்லை. ஏற்கனவே கடன் வேறு, உன்னால் எல்லாம் கோவில் கட்ட முடியுமா? போய் வேறு வேலையைப் பார் என்று சென்ற இடம் எல்லாம் ஏளனமும், அவமானமுமே பதிலாய் கிடைத்திருக்கின்றது.

எதைப்பற்றியும் கவலைப் படாமல் பாபாவின் சேவை ஒன்றையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு மேற்கொண்டு கடன் பெற்று ஒரு வழியாக பாபாவின் அனுக்கிரகத்தால் அந்தியூரிலேயே



இடம் வாங்கப்பட்டு ஆலயம் அமைக்கும் பணி துவங்கி யிருக்கிறது.

பகவான் பாபாவின் அளவற்ற கருணை நமது குரு ஸ்ரீராம் அவர்களின் வாக்கின்மூலம் வெளிப்பட ஆரம் பித்தது. அவர் கூறிய வாக்கு அப் படியே நடந்தது. ஆம், அந்தியூரில் ஆலயம் கட்டப்பட்டு, 18.01.2022 அன்று வெகு விமரிசையாக குட முழுக்கும் நடத்தப்பட்டது. பல்வேறு காரணங்களால் நமது குருவால் அந்தியூர் ஆலய குடமுழுக்கிற்கு கலந்து கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

சில மாதங்களுக்குப் பின்பு குருவை தொடர்பு கொண்ட திரு. விஸ்வநாதன் அவர்கள், நீங்கள் கூறியபடி நான் பாபாவிற்கு ஆலயம் எழுப்பிவிட்டேன். ஆனால் ஆலயம் கட்டுவதற்காக நான் வாங்கிய கடனும், எனது தனிப்பட்ட கடனும், எனது மனநிம்மதியை இழக்க வைக்கின்றன. எனது கடன்கள் தீர்ந்து நானும் என் குடும்பமும் நிம்மதியாக இருக்க பாபாவிடம் பிரார்த்திக்குமாறு

பலமுறை முறையிட்டிருக்கிறார். மேலும், ஆலயத்திற்கு தாங்கள் ஒரு முறை வரவேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கின்றார்.

அதற்கு குரு ஸ்ரீராம் அவர்கள். உலகத்தில் எவ்வளவோ நபர்கள் கணக்கிலடங்காத பொருளை வைத்தி ருந்தும் அவர்களுக் கெல்லாம் ஆலயம் கட்ட அனு கிரகம் செய்யாத பாபா, உங்களை கடன் வாங்கி தனக்கு ஆலயம் எழுப்ப வைத்திருக்கிறார் என்றால் சும்மா இல்லை. அவருக்காக நீங்கள் வாங்கிய கடன் என்னை உங்கள் ஆலயத்திற்கு பாபா அனுப்பும் போது தீர்ந்திருக்கும்.

ஆகவே எப்போது பாபா என்னை அந்தியூர் வரசொல்கிறாரோ அப்போது வருகி றேன் என கூறியிருக்கின்றார்.

அதுமட்டுமின்றி, கடன் வாங்கி ஆலயம் எழுப்பிக்கொண்டவருக்கு, கடனை அடைக்கவும் தெரியும். எனவே எப்போது பார்த்தாலும் கடன், கடன் என்று பாபாவிடம் புலம்பாதீர்கள். இன்று முதல், பாபா எல்லாம் உனக்குத் தெரியும். நீ என்ன செய்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். என்று மட்டும் பாபாவிடம் பிரார்த்தியுங்கள் என்றும் கூறியிருக்கின்றார்.

அவரும் அதுபோலவே அன்றி லிருந்து பாபாவிடம் கடனைப் பற்றி புலம்பாமல் குரு கூறியபடியே, வழிபட்டு வந்திருக்கின்றார். திடீரென மூன்று நாட்களுக்கு முன்பு குரு



ஸ்ரீராம் அவர்கள் திரு.விஸ்வநாதன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு 9.3.23 அன்று நான் ஆலயத்திற்கு வருகிறேன். என்று கூறியிருக்கிறார். சொன்னதைப் போன்று இன்று வந்திருக்கின்றார். இந்த நாளை எங்களால் மறக்க முடியாது என்று திரு.விஸ்வநாதன் அவர்கள் கூறினார்.

நாங்கள் எங்களது வாகனத்தில் அந்தியூரை அடைந்த போது மணி நண்பகல் 12. அங்கு எங்களுக்காக காத்திருந்த திரு. விஸ்வநாதன் அவர்களும், அவரது துணைவியார் அவர்களும் எங்களை வரவேற்று ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். ஸ்ரீ ஆனந்த சாய்பாபாவை தரிசித் ததும் எங்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

வீட்டிற்குச் சென்றதும் திரு. விஸ்வநாதன், திருமதி விஸ்வநாதன் இருவரும் குருவிற்கு பாத பூஜை செய்ய விரும்பினர். குரு அவர்களைத் தடுத்தும், எங்கள் குருவிற்குண்டான மரியாதையை செய்கிறோம். அதை தடுக்காதீர்கள் என்றபடி குருவிற்கு பாத பூஜை செய்து வணங்கி மகிழ்ந்தனர்.

தம்பதியரும், அவர்களது இரு மகன்களும், குருவின் மீது வைத்திருக்கும் மரியாதை, மற்றும் சரணாகதியை அவர்களது செயலிலும், முகத்திலும் கண்டோம். குரு எங்கள் வீட்டிற்கு வந்து விட்டதால் இனி எங்களது துன்பங்கள் இன்றோடு தீர்ந்து போகும் என்பதாக அவர்களின் பேச்சும், செயலும் இருந்ததைக் கண்டோம்.

அதற்கேற்றது போல் திரு. விஸ்வ நாதன் அவர்கள், நீங்கள் கூறியதுபோல் பெரும்பகுதி கடன் பாபாவின் அருளால் அடைக்கப்பட்டது என்றும் இன்னும் மீதமிருக்கும் கடனும், நீங்கள்



எங்கள் இல்லத்திற்கு வந்து விட்டதால் மிகவிரைவில் தீர்ந்துவிடும் உங்களை எங்கள் இல்லத்திற்கு அனுப்பி வைத்து சாயிநாதருக்கு கோடி நன்றிகள் என்று கூறி தங்களது ஆனந்தத்தை வெளிப்படுத்தினர்.

மதிய உணவு முடித்து, மீண்டும் மதியம் இரண்டு மணிக்கு ஆலயத்திற்கு குருவினை அழைத்து வந்தார்கள். அப்பொழுதே ஆலயத்தில் ஒரு சிலர் குருவை எதிர்பார்த்து காத்திருந்தனர். குரு அவர்கள் ஆலயத்தில் பாபா வின் இடப்பக்கம் தரையில் அமர்ந்து கொண்டு, அவர்களின் குறையைக் கேட்டு வாக்கு அளிக்க ஆரம்பித்தார்கள்.

நேரம் வான் மேகத்தைப் போன்று மெல்ல நகர, பக்தர்கள் புற்றீசல் போல வரத்தொடங்கினர். சிறிது நேரத்தில் ஆலயம் நிரம்பி, ஆலயத்தின் வெளியேயும் பக்தர்கள் காத்திருக்க ஆரம்பித்தனர். நாங்கள் குருவைப் பார்த்துக் கொண்டே இருந்தோம். இரவு ஒன்பது மணிவரை அவர் அந்த

இடத்தை விட்டு நகரவேயில்லை.

வந்திருந்த பக்தர்களை தனித்தனியாக சந்தித்த குரு அவர்கள், அவர்களின் குறைகளைக் கேட்டு, அவர்களின் கர்ம வினைகளுக்கேற்ப காலத்தை கனித்துக்கூறி அதற்குள் உங்கள் பிரச்சனை சரியாகும் என்று அவர்களுக்கு பாபாவின் பிரசாதத்தை வழங்கி ஆசி கூறினார்கள்.

பக்தர்களின் பிரட்சனைகளுக்கு அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளில் இருந்து, குறைந்தப் பட்சமாக இப்போது வீட்டிற்குச் செல்லுங்கள் மாற்றம் தெரியும் என்றார். அதுபோல் சிலரைப் பார்த்து உங்களது பிரட்சனை இது தானே! என்று, அவர்கள் கூறுவதற்கு முன்பே கூறி அது இத்தனை நாட்களில் சரியாகும் என்று கூறி, பகவான் சாயிநாதரின் தொண்டன் என்பதை நிரூபணம் செய்தார்.

நூற்றிஐம்பது நபர்களுக்கு மேலே வந்து கொண்டே இருந்த பக்தர்களின் குறைகளை கேட்டு அவர்களுக்கு வாக்களித்தார். வந்தவர்களில் இரு பெண்கள் மட்டும் குருவிடம், உங்களது ஆசி மட்டும் எங்களுக்குப் போதும் என்று கூறினர். அவர்களைப் பார்த்து குரு மிகவும் ஆனந்தமாகி, நீங்கள் இருவர்தான் உண்மையான சாயி பக்தர்கள்.

நீங்கள் நினைத்தது அனைத்தும் நிறைவேறும். உங்கள் குடும்பம் ஆனந்தமாக வாழும். வாழ்க வளமுடன் என்று சற்றே உணர்ச்சி வசப்பட்டராக அப் பெண்களை வாழ்திய விதம் என் பார்வைக்கு நிறையவே வித்தியாசமாக பட்டது.

"உங்கள் பாத்திரத்தை காலியாக வைத்திருங்கள். அதை நான் நிரப்புகிறேன்" என்று பாபா கூறுவதாக குரு அடிக்கடி கூறுவார். இவ்வசனமே அப்போது என் நினைவிற்கு வந்தது. குருவை சந்தித்த பக்தர்கள் அனைவரும் கலைந்து செல்லாமல் அவரைப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தனர். குரு அவர்கள் அரை மணிநேரம் சத்சங்கம் நிகழ்த்தினார்கள். பின்பு பத்து நிமிட தியானம் நடத்தி அனைவருக்குமான பொதுவான பிரார்த்தனை செய்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள்.

இரவு ஒன்பது மணிக்கு பாபாவிற்கு ஆரத்தி நடத்தி பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. இரவு பத்துமணிக்கு அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு எங்கள் வாகனம் சென்னையை நோக்கி புறப்பட்டது. இப்பயணத்தை மிகவும் அற்புதமாக அமைத்துக் கொடுத்த பகவான் சாயிநாதருக்கும், எங்கள் குருநாதருக்கும் எங்களது நன்றியினை சமர்ப்பித்து கொண்டு விடை பெறுகிறோம். மீண்டும் இன்னொரு பயணத்தில் சந்திப்போம்.

குரு வாழ்க! குருவே துணை!



குழந்தைகளுக்கு செல்லம் கொடுக்காதீர்!

குழந்தைகள் மேல் பெற்றோர்கள் இன்றைய காலத்தில் அளவு கடந்த பாசத்தைப் பொழிகிறார்கள். ஆனால் அந்த பாசம் மட்டும் போதாது. குழந்தைகள் மீது கட்டுப்பாடும் வேண்டும். 'அன்பு' 'ஒழுக்கம்' இரண்டும் வேண்டும். அன்பும் கட்டுப்பாடும் ஒருங்கே இருந்தால் மட்டுமே அன்பு பயன் அளிக்கும்.

இயற்கையாகவே பொது அறிவும், எது சரி, எது தவறு என்றும் உணராத குழந்தைகள் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாவதற்கு பெற்றோர்களே முதல் பொறுப்பாளிகள். சரியான நடத்தையைக் கற்றுக் கொடுக்கத் தவறுகிறார்கள். அவர்கள் செல்லம் கொடுப்பதில் செல்வத்தையும் கொடுக்கிறார்கள்.

குழந்தைகள் மிகுந்த பொருளீட்டி நல்ல செழிப்பிலும் இன்பத்திலும் வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் தங்கள் குழந்தைகளிடம் நற்பண்புகளை வளர்த்தல் பற்றி அவர்கள் சிறிதும் யோசிப்பதில்லை.

குழந்தைகளிடம் நல்ல பண்பு களையும் நேர்மையான குணங்களையும் உருவாக்கும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. வெறுமனே வாழ்க்கை நடத்த கற்றுத் தருவது சரியான முறையல்ல.

தமது குழந்தைகள் அப்பழுக்கற்ற நேர்மையான புகழுடன் வாழ்ந்தால் மட்டுமே பெற்றோர் பெருமைப்பட வேண்டும். குழந்தையை பெற்றெ டுத்ததற்காக மட்டும் பெருமை கொள்வது மூடத்தனம்.

திருதராஷ்டிரனுக்கு நூறு புதல்வர்கள். கௌரவர்கள் என்று பெயர். அவர்கள் தவறான பாதைகளில் செல்வதும் கெட்டவராய் இருப்பதும் அவனுக்குத் தெரியும். தனது இளையவனான தம்பியின் மக்கள் பாண்டவர்கள் தருமத்தின் வழி செல்வதும், அவர்களுக்கு தனது மக்கள் பல்வேறு இன்னல்களையும் இடையூறுகளையும் இழைப்பதும் அவனுக்குத் தெரியும்.

அளவுக்கு மீறிய பாசத்தை பொழிவதன் மூலம் அவனது குழந்தைகள் பாண்டவர்களை துன்புறுத்த அனுமதிக்கலாகாது என்று எவ்வளவு முறை வியாசர் கூறியும் திருதராஷ்டிரனோ அதனை பொருட்படுத்தவில்லை. முடி வில் அதன் காரணமாக அவன் பல்வேறு பாவச்செயல்களுக்கு உடந்தையாகிவிட்டான்.

வியாசர், ''திருதராஷ்டிரா! உன் புதல்வர்கள் போல் பாசம் கொள்ள வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் எப்படிப் பட்ட புதல்வர்கள் மேல் பாசம் கொள்வது என்று தெரிய வேண்டும். இது தெரியாமல் நடந்து கொள்வது குருட்டுத்தனம்.

தீயகுணம் உள்ள மகன் மீது பாசத்தை பொழிவது நாட்டிற்கும்

வீட்டிற்கும் ஆபத்து" என்று கூறினார்.

ஆனால் குருட்டுத்தனமான பிள்ளைப்பாசத்தால் அவன் பெற்றது என்ன? இறுதியில் அவனது ஈமச்சடங்கு செய்யக்கூட ஆள் இல்லாது போனது.

குழந்தைகள் மேல் பாசம் வைப்பதில் தவறில்லை . ஆனால் எப்படி என்று பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ பிள்ளைகள் தவறான பாதையில் செல்லும்போது, பெற்றோர் அவர்களை திருத்தி சரியான பாதைக்கு கொண்டுவர வேண்டும்.

உணவளிப்பதோடும், பள்ளிக்கு அனுப்புவதோடும், உலக விஷயங்களை சொல்லிக் கொடுப்பதோடும் பெற்றவர்கள் கடமை முடிந்து விடுவதில்லை. பிள்ளைகளுக்கு நன்னெறிகளையும் புகட்ட வேண்டும். சொத்து சேர்ப்பது மட்டுமே வாழ்க்கை என்று அவர்கள் நினைத்து விடக்கூடாது.

ஒருவரது இறுதிப் பயணத்தில் சேர்த்த செல்வம் உடன் செல்வதில்லை. ஒருவரது அன்றாட வாழ்வை நடத்த மட்டுமே பொருட்செல்வம் தேவைப்படுகிறது. அளவுக்கதிகமான பொருட்செல்வம், ஒருவரது கால் அளவுக்கு அதிகமான காலணி போல சிக்கல் தரக்கூடியது.

மிகக்குறைவானாலும் காலைக்கடிக்கும். இறுக்கமான காலணியும் இன்னல் தரும். எனவே ஒருவரது அளவுக்கு ஏற்றாற்போல் வைத்துக்கொள்வதே சிறப்பு.

பொருள் சேர்க்கும் வேகத்தில் மனித குணங்கள் மறக்கப்படுவது வேதனைக்குரியது. எனவே பெற்றோர்களே! உங்கள் கடமையை தட்டிக் கழிக்காது உங்கள் பிள்ளைகளை கண்டித்து வளருங்கள்.



சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் திருக்கச்சூர் "ஓம் நாத சுவாமிகளின்" சீவ பீடத்தை தரிசனம் செய்து அவரது வரலாற்றினை அறிந்து கொள்வோம் வாருங்கள்.

"ஓம் நாத சுவாமிகளின்"

சிங்கப்பெருமாள் கோவில் அருகே உள்ள திருக்கச்சூர் ஆப்பூர் மலையைச் சுற்றி எண்ணற்ற சித்தர்கள் வாழ்ந்து மக்க ளுக்கு நற்காரியங்களைச் செய்து சமாதி கொண்டுள்ளனர். அந்த சித்தர்களில் நாம் காணப்போகும் ஓம் நாத சுவாமிகளும் ஒருவர்.

21.10.1923 ஆம ஆண்டு வேலூ ரில் ஒரு எளிமையான குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதில் இருந்தே கல்வி கற்பதில் சுவாமிகளுக்கு ஆர்வம் இல்லை. மாறாக ஆன்மீக ஆர்வமே மேலோங்கியிருந்தது. அதனால் கேள்வி ஞானத்தினாலேயே கல்வி அறிவைப் பெற்றார். சிறு வயதிலேயே தம் உறவினர் ஒருவரின் நகைக் கடையில் பணிக்குச் சேர்ந்தார்.



இப்பினும் வேலையைவிட ஆன்மீ கமே அவரை அதிகம் கவர்ந்ததால் வேலையையும், குடும்பத்தையும் விட்டு விட்டு நாடோடியாக வேலூரை விட்டு வெளியேறினார். தமிழ்நாடு முழுவதும் பல ஊர்களுக்கு கால்நடையாகவே பயணம் செய்து நூற்றுக்கணக்கான ஆலயங்களை தரிசித்தார்.

அதன் பயனாக ஞானப்பிதா சித்தவித்தை யோகு குரு ஸ்ரீ சிவானந்த

பரமஹம்சரின் சீடராகி அவரிடம் " வாசி யோகம்" பயின்று அவரின் முதன்மைச் சீடர்களில் ஒருவராக திகழ்ந்தார். பல வருடங்களுக்குப் பின் மீண்டும் செய்யாறு அருகே உள்ள அனகாப்புத்தூர் என்ற கிராமத்தில் ஆஸ்ரமம் அமைத்து மக்களுக்கு ஆன்மீகத் சேவையாற்றி வந்தார்.

இருபது ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஆன்மீகத் தேடலுக்காக பல ஊர்களுக்குச் சென்றுவிட்டு கடைசியாக ஆப்பூர் மலைப் பகுதிக்கு வந்தார். ஆப்பூர் மலைப்பகுதியும், அங்கு விளைந்திருந்த மூலிகைச் செடிகளும் சுவாமிகளின் மனதை கவர சுவாமிகள் அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட்டார்.



அங்கே சுவாமிகளின் ஆன்மீக சேவைக்கு பலவகையில் உத விகரமாக இருந்த, மணவாள நாயுடு, சீனிவாச நாயுடு, ஆகியோரின் உதவியுடன், ஜெக சோதி சித்த சமாஜத்தை நிறுவி தன்னை நாடிவந்த பக்தர்களுக்கு சித்த வித்தையான "வாசி யோகத்தை" கற்றுத்தந்தார். அவரிடம் வாசி யோகம் பயின்றவர்கள் 2000 மேற்பட்டவர்கள் ஆவார்கள்.

30 ஆண்டுகளுக்கை முன்பு, ஆந்திராவில் நடைபெற்ற தியான நிகழ்வு ஒன்றில், சுவாமிகளும் கலந்து கொண்டு தியானம் செய்தார்கள். கூட்டத்தினர் ஒரு மணி நேரத்தில் தியானத்தை கலைத்துக் கொள்ள, சுவாமிகளின் தியானம் ஒன்பது மணி நேரத்தைக் கடந்து ஆழ்நிலை தியானமாக மாறியது.

இவரை பக்தர்கள் ஆப்பூர் சுவாமிகள் என்றே அழைத்தனர். வாசி யோகத்தை அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதே சுவாமிகளின் ஆசை.

சிறந்த வாசியோக ஞானியாக திகழ்ந்த அவர் தான் வாழ்ந்த ஆப்பூரிலேயே 01.05.2014 அன்று பரிபூரணம் அடைந்தார். அவரது பக்தர்கள் அவரது சீவபீடத்தை ஆப்பூரிலேயே அமைத்துள்ளனர். ஞாயிற்றுக்கிழமை தோறும் சிறப்பு பூசைகள் நடைபெறுகிறது. பவுர்ணமி தோறும் சிறப்பு பூசைகள், மதியம் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்று வருகிறது.

வாய்புள்ளவர்கள் அவசியம் சென்று சித்தரை வணங்கி அவரருள் பெருங்கள்.

சித்தர்களின் சீவ பீடத்தை தொழுவோம்! சீரான வாழ்வை சிக்கலின்றிப் பெறுவோம்!

சீவபீட முகவரி:

ஸ்ரீலஸ்ரீ பிரம்ம ஸ்ரீ ஓம் நாத சுவாமிகள், ஆப்பூர், (திருக்கச்சூர் அருகே), சிங்கபெருமாள் கோவில், செங்கல்பட்டு மாவட்டம்.

சென்னையில் இருந்து வருபவர்கள், சிங்கப்பெருமாள் கோவிலை அடைந்து அங்கிருந்து ஓரகடம் சாலையில் பயணித்தால், திருக்கச்சூர் அடுத்து ஆப்பூரைக் காணலாம்.

பேரூந்து வழித்தடம்:

சென்னை,கோயம்பேடு திருச்சி

இறங்குமிடம்: சிங்கப்பெருமாள் கோவில்.

புகை வண்டி மார்க்கம்:

சென்னை கடற்கரை செங்கல்பட்டு

இறங்குமிடம்: சிங்கப்பெருமாள் கோவில்.



இந்த இரண்டு இடங்களில் இருந்தும் சீவ பீடத்திற்குச் செல்ல ஷேர் ஆட்டோ வசதி உள்ளது.

– (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

திருச்சி பூலாங்குடி

ஸ்ரீ சாய் கோகுலம் குடமுழுக்கு விழா

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், பழங்கனாங்குடி ஊராட்சி பூலாங்குடி கிராமத்தில், ஸ்ரீ சாய் கோகுலம் என்ற சர்வ மத சமஸ்தானம் திருக்குட நன்னீராட்டு பெருவிழா கடந்த 03.03.2023 வெள்ளிக்கிழமை மிகச்சிறப்பாக நடைபெற்றது.



ஆலய வளாகத்திற்குள், ஸ்ரீ சீரடி சாய்நாதர், மற்றும் சமர்த்த சாதுக்களான, ஸ்ரீ கதிர்வேல் அருணாச்சல நவசித்தர், ஸ்ரீ தத்தர், ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி, ஸ்ரீ சமர்த்தர், ஸ்ரீ மாணிக் பிரபு, ஸ்ரீ அகஸ்தியர், ஸ்ரீ ராகவேந்திரர், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ சத்குரு சம்ஹார மூர்த்தி, ஸ்ரீ செவியுணர்ந்த சுவாமிகள், ஸ்ரீ காஞ்சிப் பெரியவர், ஸ்ரீ தாஸானந்தர், ஸ்ரீ யோகிராம் சுரத் குமார், ஸ்ரீ கணக்கம்பட்டியார், ஸ்ரீ சத்ய சாயி ஆகியோரின் சிலா ரூபங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு மகா குட முழுக்கு நடைபெற்றது.



சென்னை கதிர்வேல் ஆசிரமம், சிவஸ்ரீ ஞான தாஸானந்தம் சுவாமிகளின் தலைமையில், ஞானவயல் வாக்குச் சித்தர் ஆறுமுகனார், சீரடி

சாது ஸ்ரீ அச்சுதானந்தா சுவாமிகள், பாம்பாட்டி சித்தர்பீடம் திரு. வேலு ஐயா, ஸ்ரீ அனந்த பீடம் ரகு வீரானந்தர் ரிஷிகேஷ் சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் குட முழுக்குப் பெரு விழா கோலாகலமாக நடைபெற்றது.

பொதுவாக ஆலய குடமுழுக்கு விழாக்களில் குடமுழுக்கு நடை பெற்று முடிந்ததும் மக்கள் கூட்டம் கலைந்து சென்று விடும். ஆனால் அதற்கு நேர் மாறாக, சாய் கோகுலத்தில் குடமுழுக்கு நடைபெற்று முடிந்த பின்பு மக்கள் சாரை சாரையாக மாலை வரை வந்து கொண்டே இருந்தனர். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் ஆலய நிர்வாகத்தினர் தொடர்ந்து அன்னதானம் அளித்துக் கொண்டே இருந்தனர்.

பகவான் சாய்நாதரின் அருளாசி நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவி வருகின்றது என்ப தற்கு இவ்வாலயம் ஓர் சாட்சி. திருச்சி நகரத்தில் இருந்து 15 கிலோ மீட்டர் தள்ளி நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் இவ்வாலயம் அமைந்திருந்தும் குடமுழுக்கு பெருவிழா மிக கோலாகலமாக அதிகப்பட்ச மக்கள் கூட்டத்துடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஆலய நிர்வாகிகளும், அவர் களது குடும்ப உறுப்பினர்களும் மிகுந்த அர்ப்பணிப்புடனும், பொறுப்புடனும் விழா ஏற்பாடு களை கவனித்துக் கொண்டது. மனநிறைவைத் தந்தது.

மக்கள் சேவையே
மகேசன் சேவை.

ஓம் சாய்ராம்.







புத்துணர்ச்சி தரும் சுரைக்காய்

உடல் சூட்டைத் தணித்து உடலுக்குக் குளிர்ச்சியையும், மினு மினுப்பையும் கொடுப்பதோடு மட்டு மல்லாது, உடலில் உள்ள தேவையற்ற உப்பை நீக்கும் காய் சுரைக்காய். சுரைக்காய்க்கு உப்பில்லை என்ற பழமொழியே இருக்கிறதல்லவா?

சுரைக்காயை பச்சையாக சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால் வயிறும், குடற் பகுதியும் பாதிக்கப்படும்.

சமைத்த சுரைக்காய் சிறுநீரை நன்கு பிரிக்கும். பித்தத்தை வெளியேற்றும். புத்துணர்ச்சி தந்து உடல் உறுதியைப் புதுப்பிக்க இக்காய் பயன்படுகிறது.

சுரைக்காயை விடச் சுரைப்பிஞ்சும், சுரைக்காய்ப் பழமும் உடலுக்கு நல்லவை. இவை இரண்டையும் அடிக்கடிப் பயன்படுத்தி வந்தால் மிகச் சிறந்த உடல் நலத்தைப் பெறலாம்.

100 கிராம் சுரைக்காயில் கிடைக்கும் கலோரி அளவு 12 தான். அதில் சுண்ணாம்புச் சத்து 20 மில்லி கிராமும், பாஸ்பரஸ் 10 மில்லி கிராமும், இரும்புச் சத்து 0.7 மில்லி கிராமும், வைட்டமின் பி போன்றவை சிறிதளவும் உள்ளன. மேலும் இதில் 96.1% ஈரப்பதமும், 0.2% புரதமும், 0.1% கொழுப்பும், 0.5% தாது உப்புகளும், 0.6% நார்ச் சத்தும், 2.5% கார்போஹைடிரேடும் உள்ளன.

எனவே, சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள் பழுத்த சுரைக்காயை ரசமாக்கி, அதனுடன் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை இரசத்தையும் சேர்த்து அருந்தினால், படிப்படியாக நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

கொழுப்புச்சத்துள்ள உணவு வகைகளையும் வறுத்த உணவு வகை களையும் சாப்பிட்டவர்களுக்கு அதிக மாய் தண்ணீர்த் தாகம் எடுக்கும். வயிற்றுப்போக்கு மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கும் இதே போன்று பிரச்சினை உண்டு. இவர்கள் அனை வருக்கும் ஏற்படும் நாக்கு வறட்சியை சுரைக்காய் நீக்கும்.

கோடைக் காலத்தில் சுரைக்காய்ச் சாம்பார், பச்சடி தயாரித்துச் சாப்பிட்டால் நீர் வறச்சிக்குறைபாடு பிரச்சினையில் இருந்து எளிதில் தப்பிக்கலாம்.



இரவில் தூக்கமில்லாமல் அவதிப் படுகிறவர்கள் நல்லெண் ணெயுடன் சுரைக்காய்ச் சாற்றை யும் சேர்த்து, இரவில் தூங்கப் போகும் முன் தலையில் விட்டு மசாஜ் செய்வது போல் தலையப் பிடித்துவிட வேண்டும். முடிக்கற்றைகள், தலைப்பகுதி முதலியவற்றில் சேரும் இந்த எண்ணெய் உடனே தூக்கத்தை வரவழைத்துவிடும்.

சுரைக்காயின் இலைகளைச் சமைத்து உண்டாலும் தூக்கமின்மை நீங்கும்.

கோடை காலத்திலும், நாக்கு வறட்சி ஏற்படும் போதும் பச்சையான சுரைக்காய் ரசம் சாப்பிட விரும்பினால் ஒரு கப் ரசத்தில் ஒரு சிட்டிகை உப்பு போட்டு அருந்தினால் அதிகத்தாகம் தடுக்கப்படும். உப்பு போடாமல் இந்த ரசத்தை அருந்தக்கூடாது.

வாத நோயாளிகள், காய்ச்சலில் உள்ளவர்கள், தொந்தி வயிறு உள்ள வர்கள் (தொந்தியை அதிகப்படுத்தும் காய் இது) பாடகர்கள் முதலானோர் சுரைக்காயைப் பயன்படுத்தக் கூடாது. ஆசையெனில் எப்போதாவது ஒரு முறை சாப்பிடலாம்.

பெண்கள் மாதவிடாய் நாட்களில் கண்டிப்பாக சுரைக்காயைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. இந்தியச் சமையலில் பொதுவாக இடம் பெறும் சுரைக்காயின் தாயகம், ஆப்பிரிக்கா என்று நம்பப்படுகிறது. ஆதிமனிதன் பயிர் செய்த காய்கறிகளுள் இதுவும் ஒன்று. இது இப்போது எல்லா நாடுகளிலும் பயிர் செய்யப்படுகிறது.

சுரைக்காயில் ஓர் இனம் பாட்டில் வடிவில் இருப்பதால்தான் இதை ஆங்கிலத்தில் Bottle Gourd என்று வழங்குகின்றனர். (சுரைக்காயின் தாவர விஞ்ஞானப் பெயர், லாஜனேரியா வல்காரிஸ் என்பதாகும்).

முற்றின காய்ந்த சுரைக்காய் ஓட்டை இசைக்கருவியாகவும், மீன் பிடிக்கும் கருவியாகவும், நீச்சல் கற்கப் பயன்படும் கருவியாகவும் பயன்படுத்துகின்றனர். சுரைக்காய்ச் குடுவைகளைப் பாத்திரமாகவும் சிலர் பயன்படுத்துகின்றனர்.

நமது நாட்டில் மிகவும் மலிவாக கிடைக்கும் சுரைக்காயை அளவோடு உணவில் பயன்படுத்தி வளமோடு வாழுங்கள்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!



அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.சுந்தரவள்ளி சிவபிரசாத். சென்னை.ரூ.3000.
திருமதி.உமா மகேஸ்வரி. அறை சோதிடம்.அயனாவரம். ரூ.2000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.2000
திருமதி.யோகானந்தம் மகேஸ்வரன் ரூ.1000.
திரு.மைஸ்டிரின்.குரோம்பேட்டை. ரூ.1000.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800.
திரு.ஞானசேகரன்.அம்பத்தூர்.ரூ.550.
திரு.முரளிசாய்ராம். திருநின்றவூர். ரூ.500

திரு.பொன்முருகன் குடும்பத்தார். மதுரை. ரூ.500.
திருமதி.சுமதி. வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500.
திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500.
செல்வி.சௌம்யா. ஊட்டி.ரூ.500
திரு.டி.கோவிந்தராஜூ.வேளச்சேரி. ரூ.500
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.500.
திருமதி.பானுமதிபாண்டி. மதுரை.ரூ.500
திருமதி.ஜெயசாந்தி நாகமூர்த்தி AYK ரூ. 500
திரு. கேஸ்வர். ஈரோடு. ரூ.500.
திருமதி. இந்துமதி.அயனாவரம்.ரூ.500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.ஜானகி கண்ணன். அயனாவரம்.ரூ.300.
திருமதி.திலகம். கதிர். ரூ.300.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.L.I.C ஏஜெண்ட். கொளத்தூர்.ரூ.200.
திரு.ஸ்ரீ கணேஷ் டீ ஸ்டால். வில்லிவாக்கம்.ரூ.200.
திரு.சரண்யா. கொளத்தூர்.ரூ.201
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திருமதி.எஸ்.ரங்கநாயகி. நாகை.ரூ.200
ஜெயதேனிஷா. கொளத்தூர்.ரூ.200.
திருமதி.உமாமுருகன் சின்னாளப்பட்டி ரூ.200.
திருமதி.பிரியா குடும்பத்தார்.
அயனாவரம்.ரூ.200.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
திருமதி.பத்மா AYK ரூ.100
திரு. கிருஷ்ணன். ரூ.100.
சிவா அரிசி கடை. பெரியார் நகர்.ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
திருநீர்மலை.அரிசி 25 கி.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திருமதி.திலகம்.குரோம்பேட்டை.ரூ.260.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திருமதி.ஜானகி கண்ணன். அயனாவரம். ரூ. 200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்


அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068